விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 30 வியாழக்கிழமை (14.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

# சர்வதேச விசாரணையே நீதி கிடைக்க ஒரே வழி

## ஐ.நாவில் கஜேந்திரகுமார் வலியுறுத்து



(ஜெனிவா) சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையே தமிழருக்கான நீதிக்கான ஒரே வழி என ஐ.நா வில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு

## மைத்திரி இல்லாமல் சபையில் ஏகமனதாக ஒப்புதல்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தையடுத்து அதற்கு வாக்கெடுப்பின்றி சபையால் ஏகமனதாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

எனினும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர் கோரினார். அவரது கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்ததுடன், அவரைக் 24

## பாதாள உலகக் குழுத் தலைவர் மதூஷின் வடக்கு முகவராக யாழ் வர்த்தகர்

### பொலிஸ் விசாரணையில் கண்டறிவு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுத் தலைவர் என அறிமுகப் படுத்தப்பட்டு டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்ட மாகந்துரே மதூஷின் வடக்கு மாகாண முகவராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் செயற்பட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தகவலை சிங்கள ஊடகமான லங்காதீப வெளியிட்டுள்ளது. மாகந்துரே மதூஷின் கைதையடுத்து அந்த ஊடகம் வெளியிட்டு வரும் விசாரணை தொடர்பான அறிக்கையிடலிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பாதாளக் குழுவின் தலைவரான மாகந்துரே மதூஷ் கடந்த ஜனவரியில் 23

## முன்னாள் கடற்படை தளபதியிடம் சி.ஐ.டி நேற்று விசாரணை



(கொழும்பு)

முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் சி.ஐ.டி யினர் 23

## காணாமல் போனோரின் உறவுகள் ஆளுநர் சுரேன் ராகவனுடன் சந்திப்பு

### தமது கோரிக்கையுடனான மகஜரும் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 8 பேர் கொண்ட குழு நேற்று வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் சார்பில் ஜெனிவா செல்லவுள்ள 3 பேர் கொண்ட குழுவில் வட மாகாண 23

## மைத்திரி – மகிந்த தலைமையில் புதிய கூட்டணி

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய கூட்டணி குறித்த முறையான பேச்சுவார்த்தைகள் இன்று இடம்பெறவுள்ளதாக 23

## அரச அலுவலகங்களில் வெற்றிலை, பீடா நுகர தடை

### அமைச்சரவையில் நேற்று தீர்மானம்

(கொழும்பு)

அரச அலுவலகங்களில் வெற்றிலை, பீடா நுகர்வதை மற்றும் விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்களுக்குள் வெற்றிலை, பாக்கு, பீடா, புகையிலை உள்ளிட்டவற்றை பயன்படுத்தவும், விற்பனை செய் 23

## அரசியலமைப்பை ஜனாதிபதி தொடர்ந்து மீறுகின்றார்!

### அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் அரசியலமைப்பை மீறும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழு நிலை விவாதம் பாராளு 23

### மாவா போதைப் பொருளுடன்

## யாழ் நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மாவா போதைப்பொருளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்துக்கு நீதிமன்றில் தண்டப்பணம் செலுத்திவிட்டு வந்த அன்றைய தினமே மீளவும் மாவா போதைப்பொருளை விற்பனைக்காக தயார்ப்படுத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் நேற்று புதன் 23

## ஜெனிவாவின் புதிய பிரேரணைக்கு இலங்கை அனுசரணை வழங்கும்

### ஐ.நா செல்லும் குழுவுக்கு ஜனாதிபதி கட்டுப்பாடு

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு இலங்கை அனுசரணை வழங்கும். அத்துடன் மனித உரிமைகள் சபையில் வெளிவிவகார அமைச்சர் முன்வைக்கும் உரையை ஜனாதிபதியின் பிரதிநிதி சரத் அமு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பி வந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 54 வயதுடைய இ.யோகராசா என்பவரே இவ்வாறு பளையிலுள்ள அவரது உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பி வரும் வழியில் மயங்கி விழுந்துள்ளார்.

இவரை மீட்ட உறவினர்கள் உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர்கள் ஏற்கெனவே மாரடைப்பு காரணமாக இறந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம-3,10,30)


### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகர், நல்லூர், கச்சேரி, திருநெல்வேலி போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை (7969)

071 093 8967

### அச்சக மெசின் விற்பனைக்கு

சொலொனா மெசின், டேவிட்சன் மெசின், கட்டர் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

தயா அச்சகம் (7974)

575, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோவிலடி) 077 396 5214


## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

தென்மட்டுவில் கலைமகள் முன்பள்ளியின் 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம்நிகழ்வுநாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலைமகள் முன்பள்ளி மைதானத் தில் கலைமகள் முன்பள்ளி முகாமைத்துவக்குழு தலைவர் மு.சிவகுமார் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இதில்பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் திருமதி சிவமங்கை இராம நாதன் கலந்து கொள்கிறார். (ம-10)

## கண்ணீர் அஞ்சலி



Jaffna City Lions Club
உறுப்பினர் லயன்
**றொனிகஜன்**
அவர்களின் அன்புத் தாயார்

### க.யோகம்மா

அவர்கள் நேற்று (13.03.2019) இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்

**தலைவர், செயலாளர், பொருளாளர், கழக உறுப்பினர்கள்**
**Jaffna City Lions Club**

(7974)

## மரண அறிவித்தல்

### கணபதி நடராசா



பங்களாலேன் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நடராசா அவர்கள் கடந்த *11.03.2019* திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நடராசா செல்லம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கோமதி, வெற்றிவேல் மற்றும் வள்ளிப்பிள்ளை, சிவசுப்ரமணியம் ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் ரகுதரன் (பிரான்ஸ்), வசந்தி, தயாநிதி (பிரான்ஸ்), கிருஷ்ணராசா, நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினி தேவியின் (நோர்வே) பாசமிகு பெரியப்பாவும் கிருஸ்ணராணி, காலஞ்சென்ற காந்தரூபன் மற்றும் குணரட்ணம் (பிரான்ஸ்), வசந்தகுமாரி, ரசிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜமுகன் சங்கீதா, தணிகைமாறன், கயூரன், தேனுஜா, சர்வமகான், சர்மியா (மாணவி - இராமநாதன் நுண்கலைப்பீடம்), வைசா (மாணவி - கிழக்கு பல்கலைக்கழகம்), அர்சனா (பிரான்ஸ்), அசியா (பிரான்ஸ்), ஆருயா (பிரான்ஸ்), வனுஜா, தனுஜா, கிருஜா, கிருசாந், சந்தோஸ், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் லவகேசன், அபிசேக் ஆகியோரின் அன்புமிகு பூட்டனும் நாகம்மா, அன்னம்மா, பவளம்மா, ஆறுமுகம், சின்னம்மா, சரோஜாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(14.03.2019)* வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7970)

பங்களா லேன்,
மல்லாகம்.

தகவல்:-
குடும்பத்தினர்

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### பதவி வெற்றிடம் நிரப்புதல்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடம் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

(27.12.2018ம் திகதிய பத்திரிகை விளம்பரம் இரத்துச் செய்யப்படுகிறது)

**1. பதவிப் பெயர்:- எழுதுனர்**
குறியீட்டு இலக்கம் :- 302/14
சம்பள அளவுத்திட்டம்:- 15960-135*10-145*10-18760
வெற்றிடம் - 01

**தகைமைகள்**

- கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

- க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய விபரங்கள்**

- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (வ/மாகாணம்) சுற்றுநிருபம் 04.2017 இற்கமைய வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் எமது கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்த விண்ணப்பங்களை **"தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18 - 45 வயது வரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
- தற்போது கூட்டுறவுச் சேவையில் இருப்பவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
- நியமனத்துக்கென தெரிவு செய்யப்படும்போது சங்கத்தால் கோரப்படும் ரொக்க பிணையை செலுத்த வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி:- 28.03.2019


தலைவர்
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ
சங்கங்களின் கொத்தணி
மானிப்பாய்

திகதி 14.03.2019

(C-5772)

## மரண அறிவித்தல்

### ஜோசப் அன்ரன் லியோ அன்ரசன்



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட லியோ அன்ரசன் கடந்த 09.03.2019 சனிக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் அன்ரன் (பொலிஸ் சார்ஜன்) - புளோரன்ஸ் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விக்னேஸ்வரன் - இராக்கினியம்மா தம்பதியரின் மருமகனும் உதயராணியின் அன்புக் கணவரும் லியோ ஆனல்ட் (B.Tech), லியோனி தீப்தி (BPT), லியோ அன்ரனி (8th Std.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லியோ குயின்ரன் (Canada), லியோபிரின்ஸ் (London) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உமாராணி (Italy), பாஸ்கரன் (Italy), புனிதராணி (Negombo), தர்மி (Canada), ஆன்சி (London) ஆகியோரின் மைத்துனரும் சுரேஸ்குமார் (Italy), பேட்ரம் சிசில் (Negombo), செரின் (Italy), ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் மெல்வின், ஆஞ்சலோ, சயோன், கெவின் ஆகியோரின் பெரியப்பாவும் ப்ரைசன், பபிஸனா, ஸ்ரெபான் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று *(14.03.2019)* வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இந்தியாவில் வளசரவாக்கம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7972)

நல்லாயன் வீதி,
சில்லாலை.

தகவல்:-
வி.இராக்கினியம்மா

# தமிழரின் உள்ளக்கிடக்கையை சர்வதேசத்திற்கும் ஐ.நா.சபைக்கும் எடுத்துச்செல்ல அனைவரும் ஓரணியில் திரண்டு ஆதரவளியுங்கள்!

## பல்கலை.மாணவர்களின் பேரணிக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்.அழைப்பு


(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் எதிர்பார்ப்பை அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படுத்தும் முகமாக நாளை மறுதினம் (16.03.2019 அன்று) காலை பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்களும் இணைந்து ஒரு பிரமாண்டமான பேரணியை நடத்தவுள்ளனர். தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை சர்வதேசத்திற்கும் ஐ.நா. சபைக்கும் எடுத்துச் செல்வதற்கு அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றும் இந்தப் பேரணியின் வெற்றி தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு ஒரு நல்ல செய்தியை எடுத்துச் செல்லும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் கடந்திருக்கும் சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இன மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் பல போராட்டங்கள் நடைபெற்றுவருவதுடன், நீதி வேண்டி சர்வதேச மட்டத்திலும் பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிபபாக ஐ.நா.சபை மூன்றுபேர் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, அவர்கள் யுத்த காலத்தில் நடந்த பல்வேறுபட்ட சம்பவங்களையும் ஆராய்ந்து இலங்கையில் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றதாகவும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் இது தொடர்பான பூரணமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. ஐ.நா. செயலாளர் நாயகம் அவ்வறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்தார்.

ஐ.நாவில் 2015 ஆம் ஆண்டு 30/1 தீர்மானமும் 2017 ஆண்டு 34/1 தீர்மானமுமாக இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் பிரகாரம் இலங்கை அரசாங்கம் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய ஒரு விசாரணை ஆணைக்குழு ஒன்றை நிறுவி யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் போன்றவற்றை விசாரித்து அவற்றை மீள நிகழா வண்ணம் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் வகையில் மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளது.



இவை தவிர, காணிகள முழுமையாக மீள ஒப்படைக்கப்பட வேண்டும். வடக்கு-கிழக்கில் தேவைக்கு மேலதிகமாக உள்ள இராணுவம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் போன்ற பல கோரிக்கைகளை அத்தீர்மானங்கள் கொண்டிருந்தன. அவை இரண்டிற்கும் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் நாற்பதாவது கூட்டத்தொடரில் ஆணையாளர், இலங்கை தொடர்பில் ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் படி இலங்கை அரசாங்கம் கடந்த நான்கு வருடத்திற்குள் மிகச் சிறிய அளவே தான் ஒப்புக்கொண்ட விடயங்களில் முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாகவும் விசாரணை தொடர்பில் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் காத்திரமான நடவடிக்கை தேவை என்றும் அந்த அறிக்கையில் அவர் தனது அவதானத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி உட்பட பிரதமர், அமைச்சர்கள் அனைவருமே விசாரணை எனற விடயத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதைத் தெளிவாகக் கூறிவருகின்றனர். ஆகவே, இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு தமிழ் மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்கக்கூடிய வகையில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இத்தகைய நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள கருத்துக்களை குறிப்பாக தமிழ் மக்களுக்கு நீதிவழங்கக்கூடிய விசாரணை ஒன்றை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளாது என்ற அடிப்படையில், இந்த விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றமோ, அல்லது சர்வதேச விசேட தீர்ப்பாயம் ஒன்றோ மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எமது மக்களின் எதிர்பார்ப்பை அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படுத்தும் முகமாக நாளை மறுதினம் 16.03.2019 அன்று காலை பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்களும் இணைந்து ஒரு பிரமாண்டமான பேரணியை நடத்தவுள்ளனர். இதில் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை சர்வதேசத்திற்கும் ஐ.நா. சபைக்கும் எடுத்துச் செல்வதற்கு அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றும் இந்தப் பேரணியின் வெற்றி தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு ஒரு நல்ல செய்தியை எடுத்துச் செல்லும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

எனவே இப்பேரணிக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது பூரண ஆதரவை நல்குவதுடன் எமது ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் முழுமையாகக் கலந்து கொண்டு இதனை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம் என்று அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# கோட்லாவில் 'கோட்டைவிட்ட' இந்தியா ஹட்ரிக் வெற்றியுடன் கிண்ணம் வென்ற ஆஸி.,

கவாஜாவின் துடுப்பாட்டமும் ஷாம்பாவின் பந்துவீச்சும் கைகொடுக்க அவுஸ்திரேலியா 35 ஓட்டங்களால் வெற்றி பெற்று 3:2 என்ற கணக்கில் கிண்ணத்தை தட்டிச் சென்றது. கேதர் ஜாதவ், புவனேஷ்வர் போராட்டம் வீணானது.

இந்தியா சென்ற அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதல் நான்கு போட்டிகள் முடிவில் தொடர் 2-2 என சமநிலையில் இருந்தது.



கிண்ணம் வென்ற பூரிப்பில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள்

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி டில்லியில் உள்ள பெரோஷா கோட்லா மைதானத்தில் நடந்தது. நாணயச் சுழற்சியில்' வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் பின்ச் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் சகால், லோகேஷ் ராகுல் நீக்கப்பட்டு ஜடேஜா, ஷமி சேர்க்கப் பட்டனர். அவுஸ்திரேலிய அணியில் ஷோன் மார்ஷ், பெஹ்ரன்டர்ப்பிற்குப் பதில் ஸ்ரொய்னிஸ், லயன் வாய்ப்பு பெற்றனர்.

### கவாஜா சதம்

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் பின்ச், கவாஜா ஜோடி அசத்தலான கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 76 ஓட்டங்களைச் சேர்த்தபோது, பின்ச் (27) ஆட்டமிழந்தார். கவாஜா ஒரு நாள் அரங்கில் இரண்டாவது சதம் எட்டினார். இவர் புவனேஷ்வர் 'வேகத்தில்' 100 ஓட்டங்களில் சிக்கினார்.

### திருப்பம் தந்த ஜடேஜா

பின் ஜடேஜா 'சுழலில்' மக்ஸ்வெல் (1) ஆட்டமிழந்தார். ஷமி 'வேகத்தில்' ஹேண்ட்ஸ் கோம்ப் (52) ஆட்டமிழந்தார். ரேர்னர், ஸ்ரொய்னிஸ் தலா 20 ஓட்டங்களில் திரும்பினர். அலெக்ஸ் கரியும் (3) விரைவில் ஆட்டமிழந்தார். கடைசி நான்கு ஓவரில் கம்மின்ஸ் (15), ஜியே ரிச்சர்ட்சன் (29) பவுண்டரிகளாக விளாச, அணிக்கு 42 ஓட்டங்கள் கிடைத்தது.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களை எடுத்தது. லயன் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### மோசமான ஆரம்பம்

பின் களமிறங்கிய இந்திய அணிக்கு தவான் (12) ஏமாற்றினார். ஸ்ரொய்னிஸ் பந்தில் ஹோலி (20) சிக்க, அரங்கம் அதிர்ச்சியில் உறைந்தது. ரிஷாப் 16 ஓட்டங்களில் லயன் பந்தில் சரணடைந்தார். ரோகித் அரைச்சதம் கடந்தார்.

### கேதர் - புவனேஷ்வர் ஆறுதல்

ஷாம்பாவின் 'சுழல்' வலையில் முதலில் விஜய் சங்கர் (16) ஆட்டமிழந்தார். மீண்டும் வந்த ஷாம்பா இம்முறை இரட்டை 'அடி' கொடுத்தார். 29ஆவது ஓவரில் ரோகித் (56), ஜடேஜாவை (0) அவுட்டாக்கினார். பின் கேதர் ஜாதவ், புவனேஷ்வர் ஜோடி போராடியது. மக்ஸ்வெல், லயன் பந்துவீச்சில் ஜாதவ் பவுண்டரி அடித்தார். ஜாம்பா பந்தை புவனேஷ்வர் சிக்சருக்கு பறக்கவிட, இந்திய ரசிகர்கள் முகத்தில் லேசான நம்பிக்கை தெரிந்தது. 7வது விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், கம்மின்ஸ் 'வேகத்தில்' புவனேஷ்வர் (46) சிக்கினார். ரிச்சர்ட்சன் வீசிய அடுத்த ஓவரின் முதல் பந்தை ஜாதவ் அடித்தார். பவுண்டரி எல்லையில் இருந்த மக்ஸ்வெல் பிடி எடுக்க ஜாதவ் (44) சோகத்துடன் திரும்பினார். ஷமி (3), குல்தீப் (8) விரைவில் கிளம்ப,

இந்திய அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. ஷாம்பா அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இத்தொடரின் மூன்று, நான்காவது போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா நேற்றும் அசத்த, 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்தது.

போட்டியின் ஆட்நாயகன், தொடர்நாயகன் விருதுகளை ஆஸியின் கவாஜா தெரிவானார்.


## மரண அறிவித்தல்



## செல்லப்பா சதானந்தன் (JP)

(ஓய்வுநிலை அதிபர், முன்னாள் கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்க உப தலைவர்)

தோற்றம்: 23.07.1940 மறைவு: 13.03.2019

அல்வாய் செல்ல இல்லத்தைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபவனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சதானந்தன் (JP ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் நேற்று 13.03.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராசா - தங்கம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகியின் (இராசகுமாரி) அன்புக் கணவரும் செல்வானந்தன் (அதிபர் - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), சர்வானந்தன் (முகாமையாளர் - மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை), தேவகி (ஆசிரியர் - யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை), கருணானந்தன் (விரிவுரையாளர் - தேசிய கல்வியியற் கல்லூரி, அட்டாளைச்சேனை), றஞ்சிதா (கிராம அலுவலர் - அராலி வடக்கு) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபாலச்சந்திரன் (உரிமையாளர் - ராம் சில்க்), றிச்சேட் (ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), மாலாவதி (ஆசிரியர் - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), சுஜாதா (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பாலினி (சுற்றாடல் உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்) திருமதி சந்திரோதயம் யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் ராஜானந்தன் (தேசிய கல்வியியற் கல்லூரி - யாழ்ப்பாணம்), ஞானானந்தன், மைத்ரேஜி, சாகித்தியானந், ஆதித்தியானந், சுருதிகா, சங்கரானந், ரக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லப்பாக்கியத்தின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், விஜயரத்தினம் மற்றும் ஜெயரத்தினம், அரியரத்தினம், திருமதி இரத்தின குமாரி ஜெயவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் திருமதி இந்திரா அசோக்காந், திருமதி ரம்யா சுபேந்திரா (ஆசிரியை - யா/வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை), திருமதி கிருஷிகா அச்சுதன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2019) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5776)

தகவல்:- குடும்பத்தினர்
0776529036, 0773021910, 0772004307





கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை

## நாகதம்பிரான் ஆலய

## வருடாந்த பொங்கல் உற்சவ பங்குனி உத்தரப் பொங்கல் விழா

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவ பங்குனி உத்தரப்பொங்கல் விழா எதிர்வரும் 21ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பொங்கல் உற்சவத்திற்காக புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து உழவு இயந்திரங்கள் மூலம் தண்டல் மேற்கொள்வதற்காக எமது ஆலயத்தொண்டர்கள் 14.03.2019 இன்று முதல் பிரமந்தனாறு, விசுவமடு, கல்மடுநகர், இராமநாதபுரம், வட்டக்கச்சி மற்றும் சுதந்திரபுரம் உடையார்கட்டு வள்ளிபுனம், கண்டாவளை ஆகிய பிரதேசங்களுக்கு வருகை தரவுள்ளனர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கான நேர்த்திப்பொருட்களை வழங்கும் அடியார்கள் தங்கள் பிரதேசங்களுக்கு வருகை தரும் மேற்படி ஆலயத்தொண்டர்களிடம் நேர்த்திப்பொருட்களை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்வதுடன், தனிப்பட்ட முறையில் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு எந்த ஒரு நபருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும் அறியத் தருகின்றோம்.

தலைவர் வீ.ராமநாதன்,
செயலாளர் தி.பிரபாகரன் (C-5775)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொழில்நுட்ப பீடம்

அறிவியல்நகர், கிளிநொச்சி

**2017/2018 கல்வியாண்டு புதுமுக மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட 2017/2018 கல்வியாண்டு புதுமுக (முதலாம் வருட) மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 18.03.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகிறோம். விடுதி வசதிகள் 17.03.2019 இல் இருந்து வழங்கப்படும்.

பதிவாளர் (C-5774)

## மார்ச் 16-23வரை திரிபீடக வாரம்

(கொழும்பு)

பௌத்த மதத்தின் புனித நூலான திரிபீடகத்தை உலக மரபுரிமை சொத்தாக பிரகடனப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப கட்டமாக மார்ச் 16 தொடக்கம் மார்ச் 23 வரை திரிபீடக வாரமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

பௌத்த மதத்தின் புனித நூலான திரிபீடகத்தை உலக மரபுரிமை சொத்தாக பிரகடனப்படுத்துவதற்கான ஏற்பாடுகளின் முதல் கட்ட நடவடிக்கையே இது என்று ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசு கவிழ வேண்டும் என்பதே ஜனாதிபதியின் பிரார்த்தனை

## சரத் பொன்சேகா காட்டம்

(கொழும்பு)

**ஐ.தே.க.தலைமையிலான இந்த அரசாங்கம் கவிழ வேண்டும் என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரார்த்தனையாகவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்த குழு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்று இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்த அரசாங்கம் எப்போது கவிழும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

அதுவே ஜனாதிபதியின் தற்போதைய பிரார்த்தனையாகவும் காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய ஜனாதிபதி, அமைச்சர்கள் தனது கருத்துக்களை கேட்பதில்லை. ஏற்றுக் கொள்வதில்லை என தெரிவித்தார்.

அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி தடையாக காணப்படுகின்றார். பொருத்தமில்லாத அமைச்சுகளின் செயலாளர்களை நியமித்து அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி தடையை ஏற்படுத்துகின் றார்.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி கூறுவதை அமைச்சர்கள் எப்படி கேட்பார்கள்?" என பொன்சேகா கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7)


## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர்.

### சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம்

**(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை)**



எங்கள் அன்புத் தெய்வம் கடந்த 2019.02.12 செவ்வாய்க்கிழமை மீளாத்துயில் கொண்டதறிந்த அக்கணத்தில் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டிய உறவுகள், அமரருக்கு அஞ்சலி செலுத்தியும் இறுதி யாத்திரையில் பங்குகொண்டும் தங்கள் அன்பை வெளிப்படுத்திய அன்புள்ளங்கள், பதாகைகள் , மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செய்த அன்பர்கள், தொலைபேசி, மின்னஞ்சல், முகநூல் ஊடாகத் துயர் பகிர்ந்து கொண்ட அன்புக்குரியவர்கள், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தொண்டர்கள், நாம் தவித்திருந்த வேளையில் தோள் கொடுத்து ஆறுதல் கூறிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள். எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 16.03.2019 சனிக்கிழமை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அப்பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம். இவ்வழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பன்னாலை, தெல்லிப்பளை. (7956) குடும்பத்தினர். தொ.பே: 021 720 0427


## பேருந்து விபத்து; 11 பேர் காயம்

(கொழும்பு)

கண்டியிலிருந்து மொனராகலை நோக்கி பயணஞ்செய்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று. கண்டி - தெல்தெனிய பிரதேசத்தில் பாதையை விட்டு விலகி நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் 11 பேர் காயமடைந்ததுடன் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி.புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு



யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கதிர்காமநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். (C-5768)


## இராசி பலன்

**14.03.2019**

மாசி 30, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

அட்டமி முன்னிரவு 11.05 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 12.42 மணிவரை

சுபநேரம் 7.51 - 9.21 மணிவரை

இராகுகாலம் 1,51 - 3.21 மணிவரை

காரடையா நோன்பு

வளவன்

கிரகநிலை: செவ், சந், ராகு, சூரி, புத, சுக், சனி, குரு, கேது

சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை மதியம் 12.55இற்கு மிது-சந்

**மேடம்:** உங்களின் சொற்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**இடபம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசனசுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், செயற்பாடுகளில் திசை திருப்பங்களில் ஏற்படலாம்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பித்தம் சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கடகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, காரிய அனுகூலமுண்டு, உறவினர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில தெளிவு பிறக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**துலாம்:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு:** சிந்தனை மிகுதியான நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்து கொள்வீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சயனக்குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

## நீதிக்கான குரல் ஐ.நா. வரை கேட்க

# 16ஆம் திகதி முற்றவெளி பேரணியிலும் 19ஆம் திகதி மட்டு. போராட்டத்திலும் அணிதிரள விக்னேஸ்வரன் கோரிக்கை



வடக்கு-கிழக்கின் சகல பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து யாழ்.முற்றவெளிக்கு நடைபெற இருக்கும் கண்டன ஆர்ப்பாட்ட பேரணிக்கும் மட்டக்களப்பில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் கதவடைப்பு மற்றும் மாபெரும் கவனயீர்ப்பு பேரணிக்கும் தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், அடிக்கடி நடைபெறும் கதவடைப்பு போராட்டங்களும் ஆர்ப்பாட்ட பேரணிகளும் மக்களின் சகஜ வாழ்க்கையை பாதித்து பொருளாதார, செயற்பாடுகளையும், நாளாந்த வருவாய்களையும் பாதிக்கும் என்றபோதிலும் அவற்றை எல்லாம் ஒரு பொருட்டாகக் கருதாமல் எமக்கான உரிமைகளும் நீதியுமே முக்கியம் என்று தமிழ் மக்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் சாத்வீக போராட்டங்கள்தான் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளையும் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றிருக்கின்றது. எமது மக்கள் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக முன்னெடுத்துவரும் இத்தகைய போராட்டங்கள் தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச சமூகத்தினால் உட்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் தீர்மானத்தினை நிறைவேற்றாமல் ஏமாற்றுவித்தைகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் நாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் இத்தகைய போராட்டங்கள் தான் ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சிக் கதவுகளைத் தட்டி எழுப்புவன. அவ்வாறான தொடர் போராட்டங்களே இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகம் மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஐ.நா.தீர்மானத்தினை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறி இருக்கின்ற நிலையில் இலங்கையைப் பாதுகாப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் அல்லது சர்வதேச நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட தகுந்த பொறிமுறை ஊடாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் சபை தனது அலுவலகத்தை இலங்கையில் திறந்து விசேட பிரதிநிதி ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுவருகின்றோம். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மக்களின் போராட்டங்களிலும் இந்தக் கோரிக்கைகளே விடுக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகள் இன்று சர்வதேச ரீதியாகவும் விடுக்கப்பட்டு வருகின்றமை உங்கள் போராட்டத்தின் வலிமையை எடுத்துக்காட்டுகின்றன. சிலர் இந்தப் போராட்டங்களின் போது சோர்வடைந்துள்ளதையும் பார்த்துள்ளேன். ஆனால் இன்று நிலைமை சீரடைந்து வருகின்றது. சர்வதேச நாடுகள் ஓரளவு விழித்துக் கொண்டிருப்பது இதற்கு ஒரு காரணம். மனிதஉரிமைகள் சபையின் ஆணையாளர் சில தினங்களுக்கு முன்னர் விடுத்துள்ள அறிக்கையில் இவை தொடர்பில் சில சாதகமான விடயங்களைப் பரிந்துரைத்துள்ளார். அதேபோல சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவும் இலங்கை விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுவது உட்பட நாம் கோருகின்ற பல விடயங்களை வலியுறுத்தியுள்ளது.

ஆகவே, மிகவும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் நாம் இன்று நிற்கின்றோம். அடக்குமுறைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டமும் நீதிக்கான போராட்டங்களும் இன்று எழுச்சி அடைந்திருக்கின்றது. குறிப்பாக எமது இளம் சமுதாயத்தினரும் பெண்களும் தலைமை ஏற்று மேற்கொண்டு வரும் தொடர் போராட்டங்கள் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்திருக்கின்றது. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்படும் விதம் எனக்கு மிகுந்த உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அளித்திருக்கின்றது. பெண்களும் இளம் சமுதாயத்தினரும் சாத்வீக வழிகளில் அடக்கு முறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டிய பல உதாரணங்களை உலக வரலாறுகளில் காண்கின்றோம். வடக்கு-கிழக்கில் இன்று ஏற்பட்டு வரும் புதிய போராட்ட பரிமாணத்தை கவனத்தில் எடுத்து ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகமும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் நிலைமை நிச்சயமாக உருவாகும் என எதிர்பார்க்கலாம்.

காணாமல் போனவர்களின் உறவினர்களின் அமைப்புக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கடந்த காலங்களில் மிகவும் பொறுப்புணர்வுடன் மிகச் சிறந்தமுறையில் போராட்டங்களை ஒழுங்கமைத்து இருந்தார்கள். குறிப்பாகக் கிளிநொச்சியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் பலரதும் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. கிளிநொச்சி போராட்டத்துக்கு பொதுமக்களும் வர்த்தகர்களும் வழங்கிய பேராதரவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல 16ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் போராட்டமும் மட்டக்களப்பில் 19ஆம் திகதி நடைபெறும் போராட்டமும் முக்கியமானவை. இந்த இரண்டு போராட்டங்களுக்கும் உங்கள் முழுமையான ஆதரவை வழங்கி எமதுமக்களின் நீதிக்கான குரல் ஐ.நா வரைகேட்பதற்கு அணிதிரள்வீர்கள் என்று நம்புகின்றேன். நானும் இந்த இரண்டு போராட்டங்களிலும் உங்களில் ஒருவனாகக்கலந்து கொள்ளவிருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரை மணலில் பதுக்கி வைத்திருந்த கேரளக் கஞ்சா கண்டுபிடிப்பு

## இருபது இலட்சம் ரூபாய் பெறுமதியாம்

(தனுஷ்கோடி)

இலங்கைக்குக் கடத்துவதற்காக தனுஷ்கோடி கடற்கரை மணலில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக்கஞ்சா தமிழக பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைப்பற்றப்பட்டுள்ளது.

இரண்டு பைகளில் 30 பொதிகளாக பொதிசெய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந் நிலையில், குறித்த கேரளக் கஞ்சாவை கடத்த் முற்பட்டவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர் என்றும் இச் சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தில் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் இருந்து இலங்கைக்கு கடத்த முயற்சிக்கப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோத்தாவின் ரிட் மனு பரிசீலனை 26ம் திகதி



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல் செய்த ரிட் மனுவை எதிர்வரும் 26 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.

வீரகெட்டிய, மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த கோபுரம் மற்றும் நூதனசாலை நிர்மாணப் பணிகளுக்காக 33.9 மில்லியன் ரூபாய் அரச பணத்தை தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுக்களின் கீழ் தமக்கு எதிராக நிரந்தர விசேட மேல் நீதி மன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்ய தடைவிதித்து உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந் நிலையில் குறித்த மனு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகள் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மனுவை எதிர்வரும் 26 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

# மார்ச் 12 இயக்கத்தின் 'எங்கள் கனவு ஜனாதிபதி'



(கொழும்பு)

மார்ச் 12 இயக்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் "எங்கள் கனவு ஜனாதிபத" எனும் தொனிப் பொருளில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் மார்ச் 12 இ[illegible]கத்தின் செயற்குழு உறுப்பினர்களான ரோஹண ஹெட்டியாராச்சி, மஞ்சுள கஜநாயக்க, தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சமன்சிறி ரத்நாயக்க, பேராசிரியர் பாஸ்கரன் உள்ளிட்ட பல துறைசார்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் இதன்போது தமது கனவு ஜனாதிபதி எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பில் கருத்து வெளியிடும் நிகழ்வும் இடம்பெற்றது. (இ-7)

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம்.(கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(7957)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## ஜீ பூம்பா கைது

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள கஞ்சிப் பானை இம்ரானின் உதவியாளர் எனத் தெரிவிக்கப்படும் கம்பளை வெவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஜீ பூம்பா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடு சூட்டி என்பவருக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியமை மற்றும்பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இவர் கம்பளையில் வைத்து பொலிஸ் அதிரடிப் படையினரால் நேற்றுக்காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.(இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L,பகரைன் (அரபுநாடு)
எதிர்பார்ப்பு:அரசதொழில் உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9467

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்திராடம்
கி.பா: 55செவ் 8 இல்
தகைமைதொழில்BAபட்டதாரி,Swiss PR
எதிர்பார்ப்பு: A/L, உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9472

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 2
கி.பா: 35 ¼ சூரி செவ் 12 இல்
உயரம்: 5'7".
தகைமை/தொழில்:AAT, France PR
எதிர்பார்ப்பு: A/L, உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9473

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 10 ½ உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L,றேடர்ஸ் உரிமையாளர்-சொந்த
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோக/ உத்தியோகமற்ற பெண்
தொ.இ: B/9478

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BA, CIMA
எதிர்பார்ப்பு:படித்தவரன், (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/9480

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 66 செவ் 7 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்:B.Sc Electric Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி,Engineer, Doctor, Accountant, (உள்நாடு)
தொ.இ: G/9487

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 72 சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BBA பட்டதாரி, அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்,உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9488

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 4செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA பட்டதாரி தனியார் கணக்காளர்
எதிர்பார்ப்பு:அரச தனியார் நிரந்தர தொழில், உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9489

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## காவேரி தொழிலகத்தின் 3ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தொழில் வாரிசுகளை உருவாக்கல்

தொழில் இல்லை என ஏங்கும் எமது உறவுகள், முன்னால் போராளிகள், மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்தவர்கள், யார் ஆதரவும் அற்றவர்களுக்கு மட்டும் எவரும் வெளிப்படுத்த விரும்பாத தொழில் பயிற்சிகள் விற்பனைத்திறன் விருத்திப் பயிற்சிகள்.

1. வாசனை ஊதுபத்தி 2. வர்ண மெழுகுவர்த்திகள்

3. கடித உறை தயாரிப்பு, சிறப்புப் பயிற்சியுடன் மேலும் பல தொழில் உற்பத்தி ஆலோசனைகள் சிறப்பாக- தயாரிப்பு விற்பனை செய்வோரிற்கு உபகரண உதவிகள் பெற உதவி செய்யப்படும்.

நேர்முக கலந்துரையாடல்- 24.03.2019 காலை 10.30

பெண் பராமரிப்பாளர்- கணவனை இழந்த- பொறுப்புக்கள்
ஆதரவு அற்ற- கல்வியறிவுடைய
40-50 வயதுக்கிடைப்பட்டவர் தொழிலகத்தில் தங்கியிருத்தல் வேண்டும். கொடுப்பனவு நேரில்.

(7963)

**பிள்ளையார் கோவில் வீதி,**
**2 ஆம் வட்டாரம், கைவேரி, புதுக்குடியிருப்பு.**
**தொ.பேசி. 070 310 7250, 077 967 2462**




## மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# வடமாகாணத்தில் நேற்று அதிபர்கள், ஆசிரியர்கள்

# கறுப்புப் பட்டியுடன் கவனயீர்ப்புப் போராட்டம்



யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்



யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி


யாழ்.யூனியன் கல்லூரி


யாழ்.இந்து மகளிர் கல்லூரி



யாழ்.-மானிப்பாய் இந்துக்கல்லூரி


யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி


யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயம்


கிளிநொச்சி மகா வித்தியாலயம்


மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி


மன்.புனித சவேரியார் பெண்கள் கல்லூரி


வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்




மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாண அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்று கறுப்புப் பட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தரம் III புதிய அதிபர் சங்கம் ஆகியவை இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்றுக் காலை 8 மணி முதல் சுமார் 30 நிமிடங்கள் கறுப்புப் பட்டி அணிந்து, மௌனப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துதல், ஆசிரியர்கள் மீது செலுத்தப்படும் தேவையற்ற நெருக்கீடுகளை அகற்ற வேண்டும்.

மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக 6 வீதம் ஒதுக்குதல் போன்ற மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் நேற்று பாடசாலை நிறைவடையும் வரை வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமைகளை முன்னெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-30-101-105,250, 285, 286)

# நூறாண்டு சென்றாலும் மறக்கமுடியாத அருள்மொழி அரசியின் ஓராண்டு நிறைவு



உலகிற்கு நன்னெறி காட்டிய ஓர் உயர்ந்த ஆன்மா ஓய்வடைந்து ஓராண்டு பூர்த்தியாகிறது. "அருள்மொழிஅரசி" வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்மையாரின் நிரப்பமுடியாத இழப்பால் ஈழத்தின் சைவத்தமிழ் உலகு பெருந்துயருற்று நிற்கிறது. தமிழ்நாட்டில் பிறந்து தர்மபுர ஆதீனக் கல்லூரியில் சைவத்தையும் தமிழையும் துறைபோகக் கற்று, வித்துவான் பட்டம் பெற்று, பேரறிஞராக மிளிர்ந்த அன்னையார் தனது மைத்துனராகிய யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த திரு. வைத்தியநாதன் அவர்களின் கரம்பிடித்து, ஈழத்தார் செய்த தவப்பயனால் இம்மண்ணின் மருமகளாக வந்து சேர்ந்தார்.

வங்கி முகாமையாளராகப் பணியாற்றிய வைத்தியநாதன் அவர்கள் தன் இல்ல விளக்காய் வந்த துணைவியாரின் அறிவாற்றலை வியந்து, இவர் வீட்டுக்கு ஒளிதரவந்த விளக்கு மட்டுமல்ல இந்நாட்டுக்கும் ஒளிதரவந்த விளக்காம் என முடிவு செய்தார். அம்மையாரின் தமிழ், சைவ அறிவை இந்நாட்டின் தமிழுலகும் சைவ உலகும் பயன்பெறும் வண்ணம் அன்னையை ஈழத்தின் ஆலயங்களிலும் சமய, இலக்கிய விழாக்களிலும் தானே அழைத்துச் சென்று சொற்பொழிவாற்ற வைத்து இம்மண் பயனுறச் செய்தார்.

தன் கணவனாரின் மறைவின் பின்னர் தமிழகத்தில் வாழ்ந்த அவரது குடும்பத்தார் அங்கு வந்துவிடும்படி எவ்வளவோ வலியுறுத்தி வேண்டியும் "இந்த மண் தான் என்னை வாழ வைத்த மண் இதனை விட்டு எக்காரணம் கொண்டும் அங்கு வரமாட்டேன்" எனக் கூறி உறுதியுடன் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் தனித்து அவற்றுக்கு முகம் கொடுத்து வாழ்ந்தவர் நம் அம்மையார்.

அம்மையாரின் வாக்குத்திறன் அபூர்வமானது. ஈழத்தில் பெண் பேச்சாளர்கள் அதிகம் இல்லை என்ற குறையை அக்காலத்தில் நீக்கியவர்கள் இருவர். ஒருவர் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். மற்றவர் "அருள் மொழிஅரசி" அமரர் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள். வேறு சில பெண் பேச்சாளர்கள் இருந்தபோதும் இவ்விருவரைப் போல் சைவத்திற்காகவும் தமிழிற்காகவும் தம்மை முழுமையாய் அர்ப்பணித்த பெருமை அவர்களுக்கு வாய்க்கவில்லை.

சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் சமய உரைகளோடு நின்றுவிடாமல் சமய சாதனைகளும் புரிந்தார். நம் அருள்மொழிஅரசி அம்மையார் அவர்களோ படிப்பது, படித்ததை மற்றவர்களுக்கு உரைப்பது, உரைத்ததன்படி தான் வாழ்ந்து காட்டுவது என தமது வாழ்வை மற்றவர்களுக்கான ஒரு முன்னுதாரணமாய் ஆக்கிப் புகழ் கொண்டார். அம்மையாருடைய இந்தியப் பாணியிலான சொற்பொழிவு நடை நம் மண்ணில் பலரையும் கவர்ந்தது. அதனால் ஓய்வுக்கு நேரமின்றித் தினமும் எங்கோ ஓர் இடத்தில் சொற்பொழிவாற்ற வேண்டிய நிலையில் அவர் இருந்தார்.

அம்மையாரின் ஞாபகசக்தி அபூர்வமானது. தமிழிலோ சைவத்திலோ எந்த விடயத்தை எப்போது எவர் கேட்டாலும் உடன் பதில் சொல்லக்கூடிய ஒரு நடமாடும் நூலகமாகவே அம்மையார் திகழ்ந்தார். சமய வாழ்வைப் பொறுத்தளவில் தாம் கற்ற அனைத்தையும் அம்மையார் தன் தனி வாழ்வில் நூற்றுக்கு நூறுவீதம் கடைப்பிடித்தார். அந்தணர் குலத்தில் தோன்றிய அம்மையார் அவர்கள் அக்குல ஆசாரங்கள் எதனையும் எக்காரணம் கொண்டும் விட்டுவிடாமல் பேணி வந்தார். வெளிநாடுகளுக்கு விமானத்தில் பயணம் செய்யும் போது கூட தனக்கான உணவைத் தானே தயாரித்து எடுத்துச் செல்லுமளவிற்குத் ஆசாரம் பேணுபவர் அவர்.

கொழும்பு விவேகானந்த சபை, ஸ்ரீ இராமகான சபை, இந்துக் கலாசார அமைச்சு போன்ற அமைப்புக்களில் அம்மையாருடைய பங்களிப்பு மிக முக்கியமானதாய்த் திகழ்ந்தது. இந்து கலாசார அமைச்சின் நூல் வெளியீடுகளிலும், அது நடத்திய பரீட்சைகளிலும், கருத்தரங்கங்களிலும் அம்மையார் ஈடுபாட்டோடு பணியாற்றி வந்தார். அதுமட்டுமன்றி இந்நாட்டின் ஊடகங்கள் அனைத்திலும் அம்மையாரின் பணி மிக முக்கியமானதாக இருந்தது.

தன்னோடு பழகும் அனைவரையும் அன்பான வார்த்தைகளாலும் செயலாலும் ஈர்த்து வந்த அம்மையார் தன் இல்லம் தேடி வருகிறவர்களுக்கு உணவிடாமல் ஒருநாளும் அவர்களைத் திருப்பி அனுப்பமாட்டார். எங்கள் கம்பன்கழகத்திற்கு வரும் இந்திய இசைக்கலைஞர்கள் அம்மையாரின் உபசாரத்தில் மயங்கி அவரை "அன்னபூரணி" என்றே அழைப்பார்கள்.

1980 ஆம் ஆண்டு முதல் எங்களின் கம்பன்கழகத்தோடு இணைந்து செயற்பட்ட அம்மையார் எமது கழகத்தைப் பலவழிகளாலும் நெறிப்படுத்தினார். நாம் கொழும்புக்கு வந்த பிறகு 2000 ஆம் ஆண்டளவில் தனித்திருந்த அம்மையார் எம்முடனேயே வந்து தன் இறுதிநாள் வரை கழகத்தில் தங்கி ஒரு தாயாய் எம்மைப் பேணி உடனிருந்து காத்தார். எமது கம்பன் கழகம் அமைத்த தத்துவத் திருக்கோயில் அம்மையாரின் ஈடுபாட்டுக்குரிய ஆலயமாக மிளிர்ந்தது. உயிர் பிரியும் அன்றுகூட அம்மையார் அன்னையின் வழிபாட்டை முடித்திருந்தார். கம்பன் கழகப் பிள்ளைகளை தனது பிள்ளைகளாய்ப் போற்றிய அன்னையின் இழப்பால் கம்பன் கழகம் பெருந்துயருற்று நிற்கிறது.

அம்மையார் தனது வாழ்நாள் முழுவதும் சொற்பொழிவுகளால் சேர்த்த செல்வத்தை கம்பன்கழகத்திடம் ஒப்படைத்து அதனை ஓர் அறக்கட்டளையோடு இன்னென்ன வகையில் பயன்படுத்தவேண்டும் என்று எம்மைப் பணித்துள்ளார். அடுத்த மாதத்தில் கம்பன் கழகமும் இந்துக்கலாசாரத் திணைக்களமும் இணைந்து நடத்தவுள்ள அம்மையாரின் நினைவஞ்சலிக் கூட்டத்தின் போது இவ் அறக்கட்டளையை நாம் ஸ்தாபிக்கவுள்ளோம். எங்கோ பிறந்து இம்மண்ணைத் தன் சொந்த மண்ணாய் நினைந்து தினம் தினம் தன் கணீரென்ற குரலால் தமிழையும் சைவத்தையும் போதித்து நின்ற அன்னை மறைந்து ஓராண்டு நிறைவடைகிறது. அவரது தூய வாழ்வால் பல்லாண்டுகள் ஈழ மக்கள் மனதில் அவர் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

# கிழக்கிலும் கவனயீர்ப்புப் போராட்டம்





அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி நேற்றுப் புதன் கிழமை மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரி முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதிபர், ஆசிரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேல் நிலவும் ஆசிரியர்கள், அதிபர்கள் சேவை சம்பள முரண்பாட்டை தீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்வதால் அதற்கெதிராக போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மூன்று மாத நிலுவைப்பணம் உள்ளிட்ட மேலும் ஆறு கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)

## குறை'களை' பதிகம் 31

# ஆண்டவன் வழி அமைதி வழியே



ஆன்மா லயிக்கும் இடம்
ஆலயம் எனப்படும் - அங்கு
அமைதி நிலவும்

வேப்பமர விருட்சம்
பழம் விரும்பி உண்ணும்
காகமும் குயிலும்
சண்டையிட்டுச் சகஜமாகி
பழத்தை உண்டு மகிழும்

கொக்குருவாச்சி தண்டமடித்து
தம் சந்ததி பரப்பிடும்

சின்னஞ்சிறு சிட்டுகள்
மணலில் தடம் பதித்து
சில்லென சிரித்து மகிழ்வர்

அதுதான் ஆலய சந்நிதி

ஆலயங்களில்
ஒலிபெருக்கிக் கலாசாரம் உருவானது
அடடா அந்த அத்தனையும்
துரத்தி அடிக்கப்பட்டது

பூசை நடந்ததோ இல்லையோ
அதிகாலையில் அலறிடும் ஒலிபெருக்கி

ஊருக்கு ஐந்து கோவில் - அந்த
ஐந்திலும் அதிகாலை அலறலென்றால்
சொல்லவா வேண்டும்

ஆலயம் சென்று
நோய் தீர்த்த காலம் மாறி
ஆலயத்து ஒலிபெருக்கி அலறலில்
பிரசர் அதிகரித்து ஆஸ்பத்திரி போகும் காலம்
எத்துணை நியாயம்

கல்வி கற்றிடும் மாணவர்
காலையில் படித்தால்
ஞாபகம் நின்றிடும் என
நாலுமணிக்கெழும்பினால்
நியாயமோ நீதியோ
ஆலய அறங்காவலரே
ஆழ்ந்து சிந்திப்பீர்!

ஊரினில் உங்கள் வித்துவத்தைக் காட்டிட
காலையில் ஒலிபெருக்கியை
கதற விடுவதுதான் நீதியோ!

காதை அடைத்திட்டு பாயினில் சரிந்திட
பாண் வண்டி வருகுது பாட்டுப் பாடிக்கொண்டு

போங்கடா...
நீங்களும் உங்கள்...

ஐயாக்களே!
அருமை ராசாக்களே!
அதிக சத்தத்தில் ஸ்பீக்கரை போடென்று
சாமி சொல்லலையே!

தர்மகர்த்தாக்களே!
ஆண்டவன் வழி அறியும்
அவர்க்கு அமைதியே பிடிக்கும்
ஆன்மா லயிக்குமிடம் ஆலயம்
என்பதால் அமைதி நிலவிட உதவுங்கள்

**மாவை. நா.கஜேந்திரன்**

# வெவ்வேறு குற்றச்சம்பவங்களில் ஈடுபட்ட 11 சந்தேக நபர்கள் தடயப்பொருட்களுடன் கைது

## கசிப்பு உற்பத்தி நிலையங்களும் சுற்றிவளைப்பு

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் உட்பட ஐந்து வெவ்வேறு குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட 11, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டபிள்யூ. விமல குணரட்ன தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட பணிப்புரைக்கு அமைய நேற்று முன்தினம் முற்பகல் 10 மணி தொடக்கம் நேற்று முற்பகல் 10. மணி வரையிலான 24 மணி நேரக் காலப்பகுதியில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பகுதியில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் தருமபுரம் பொலிஸாரும் மற்றும் கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பொலிஸாரும் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந் நடவடிக்கையின் தொடக்கத்தில் தருமபுரம் கல்லாற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைந்து ஐந்து பெரல் கசிப்புக் கோடா, 80 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தும் உபகரணங்களைக் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர்கள் 02, பேரைக்கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியுள்ளனர்.

அன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் நெத்தலியாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த மூன்று உழவு இயந்திரங்களையும் ஒரு இரண்டு சக்கர உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் 04, பேரைக் கைது செய்துள்ளனர்.


பிற்பகல் 6.30, மணியளவில் தருமபுரம் நெத்தலியாற்றுப் பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களைக் கைப்பற்றியதுடன் இருவர் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை தருமபுரம் பொலிஸாருக்கு பாடசாலை மாணவர்கள் வழங்கிய இரகசியத் தகவலுக்கு அமைய பெரியகுளம் துவரையாற்றுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தைக் கைப்பற்றி 80 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர்கள் இரண்டு பேரையும் கைது செய்து கொண்டு பொலிஸ் நிலையம் திரும்புகையில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட காட்டு மரத் தடிகளை ஏற்றிப் பயணித்த பட்டா ரக வாகனத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த 05 குற்றச் சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. டபிள்யூ. விமலகுணரட்ன தெரிவித்துள்ளார். (2-15)

செஞ்சிலுவைச் சங்கத்தினரால்

# வீடு தீக்கிரையான குடும்பத்திற்கு உதவி





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பகுதியில் தீ அனர்த்தத்தினால் வீட்டை முற்றாக இழந்த குடும்பத்திற்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினரால் உடனடித் தேவைகளுக்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை வேளை குறித்த வீடு தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் உடனடி ஏற்பாடாக செஞ்சிலுவை தொண்டர்களை கொண்டு தற்காலிக தங்குமிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அவசர நிவாரண உதவிப் பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார்கள்.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவு மாவட்ட கிளை தொண்டர்களுடன் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு குடும்பத்திற்கான தற்காலிக உதவிகளை வழங்கி வைத்துள்ளார்கள். (2-285)

# கல்மடுவில் யானைகளால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் மதிப்பீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடுப்பிரதேசத்தில் காட்டுயானைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவப்பிரிவு மற்றும் கண்டாவளைப் பிரதேச உத்தியோகத்தர்கள், பார்வையிட்டு அழிவுகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடு 10 ஏக்கர் திட்டம் நாவல்நகர், றங்கன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக காட்டு யானைகளால் பெருமளவான தென்னை மரங்கள், பயன்தரும் மரங்கள் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஊர்மனைக்குள் வரும் யானைகள் பிளாஸ்ரிக் கழிவுகள், கடதாசிகள் என்பவற்றை உட்கொள்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பிரதேசத்தில் காட்டு யானைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் பிரதேச மக்களால் கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளைத்தொடர்ந்து கண்டாவளைப்பிரதேச செயலகத்தின் அனர்த்தமுகாமைத்துவப்பிரிவு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மேற்படி கிராமங்களுக்குச்சென்று விவசாயிகளுக்கும் பிரதேச மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புக்கள் தொடர்பிலும் மதிப்பீடுகளை செய்துள்ளனர். (2-315)




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன



(கிளிநொச்சி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

லக்ஜய மைக்ரோ பெனான்ஸ் நிறுவனத்தினால் குறித்த உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 600 மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பதற்கான முதல் கட்ட நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முதல் கட்டமாக நேற்று 100 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அடுத்த கட்டமாக ஏனையோருக்கு எதிர்வரும் நாட்களில் பகிர்ந்தளிக்கவுள்ளதாக நிறுவன ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (2)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு

# பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றனர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியிலாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

இதேவேளை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் கடமையாற்றிய ரி.இராஜகோபு கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளராக தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (2-315)

# பாவற்குளம் வைத்தியசாலை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் நாட்ட திட்டம்

(கிளிநொச்சி)

பாவற்குளம் கிராமத்தின் பொது மக்கள் மற்றும் பாவற்குளம் வைத்தியசாலை அதிகாரிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் புலம்பெயர்ந்து வாழும் பாவற்குளம் உறவுகளின் அனுசரணையுடன் பாவற்குளம் வைத்தியசாலையின் பற்றைகள் நிறைந்திருந்த சுற்றாடல், கனரக வாகனத்தின் உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் வாழும் பாவற்குளம் உறவுகளின் இணைப்பாளரினதும் கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் நிதியுதவியுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர், வைத்தியசாலை அதிகாரிகள் ஆகியோரினது கண்காணிப்பின் கீழ் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

துப்புரவு செய்யப்பட்ட பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மிக விரைவில் பயன் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டு, வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும் நிகழ்வு இடம்பெறும் என கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். (2)

# கிளிநொச்சியில் ஆயிரத்து 200 ஏக்கரில் சிறுதானியச் செய்கை மேற்கொள்ள தீர்மானம்

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோகச் செய்கையின் போது ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

விவசாயத்தை வாழ்வதாரமாகக் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாகக்காணப்படுகின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் உப உணவுச்செய்கைகளை விஸ்தரிப்பதற்கான பல்வேறு திட்டங்கள் கடந்தாண்டுகளில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாண்டும் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சிறுபோகச் செய்கையில் சிறுதானியச் செய்கையை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த பிரதி விவசாயப்பணிப்பாளர்.

இவ்வாண்டு சிறுபோகத்தின் போது நெற்செய்கை தவிர்ந்த மாற்றுப்பயிர்களான உளுந்து, பயறு, நிலக்கடலை போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு இந்த நெல்லைச் சந்தைப்படுத்த முடியவில்லை. அதற்கான விலைகள் கிடைக்கவில்லை. உப உணவு உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பிருக்கின்றது. ஆகவே இந்தப் பயிர்களைச் செய்வதற்கு விவசாயிகள் முன்வரவேண்டும்.

உபஉணவுச்செய்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறு திட்டங்கள் இந்த மாவட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது, 50 வீத மானியத்திலும் முழுமையான மானியத்திலும் சில உள்ளீடுகளை வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம்.

மாவட்டத்தில் 800 ஏக்கர் அளவில் இத்திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்டத்தில் உள்ள அனைத்துக்குளங்களுக்குமான சிறுபோகக்கூட்டங்களில் கூடி மொத்தமாக ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுச்செய்கையை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.

அதேபோல திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்திலும் இந்த உபஉணவுச்செய்கை முழுமையாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)



# வவுனியா பொது அமைப்புகளுடன் பல்கலை.மாணவர் கலந்துரையாடல்



(குருமன்காடு)

காணாமலாக்கப்பட்டோரின் நிலையை வெளிப்படுத்தக்கோரியும், மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பல்கலைக்கழக மாணவர்கள், வவுனியா மாவட்ட பொது அமைப்புகள், அரசியல்கட்சிகளைச் சார்ந்தோர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் பல்வேறு குழுக்களாக பிரிந்து செயற்படுகின்றமை மற்றும் தன்னிச்சையாக செயற்படுகின்றமை அவர்களை ஒருங்கிணைப்பது ஆகியவை தொடர்பாகவும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. போராட்டத்திற்கு அனைத்து தரப்பும் ஆதரவை வழங்க வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்களால் கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில் கலந்துரையாடலில் பங்குகொண்டிருந்த வவுனியா வர்த்தகர்சங்கம், வவுனியா வரியிறுப்பாளர்சங்கம் ஆகியன குறித்த போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# உணவகம்,தொழிற்பயிற்சி நிலையம் மல்லாவியில் விரைவில் திறக்கப்படும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவியில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய உணவகம், தொழிற்பயிற்சி நிலையம் என்பன மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.

மல்லாவிப்பிரதேசத்தில் விவசாயிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையம் பாரம்பரிய உணவுவகைகளின் உணவகம் ஆகியவற்றை அமைக்குமாறு பல்வேறு கோரிக்கைகள் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையில் தொழிற்பயிற்சி நிலையமும பாரம்பரிய உணவகமும் அமைக்கப்பட்டு அதன் கட்டுமானப்பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ள போதும், இது வரை அது திறந்து வைக்கப்படவில்லை.

இது தொடர்பில் விவசாயப்பணிப்பாளரைத் தொடர்பு கொண்டபோது, உள்ளக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக 5 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்று 4,25 மில்லியன் ரூபா செலவில் பாரம்பரிய உணவகத்திற்கான கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன.

மீதமாகவுள்ள நிதியில் ஏனையவேலைகளை முன்னெடுக்கவுள்ளோம் எனக்குறிப்பிட்டஅவர், மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் கிடைக்கப்பெற்ற 7 மில்லியன் ரூபா செலவில் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை விரைவில் திறந்து வைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# இருவர் கைது

வவுனியாவில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார்தெரிவித்தனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த வவுனியா பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவினர் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த இருவரை சோதனை செய்த போது அவர்களிடமிருந்து போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாளிகாவத்தை, நுகேகொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 வயதுடையவர்கள். அவர்களது பையில் இருந்து இரண்டு கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# சாமர்த்தியமான தாதியத் தலைவர் தேர்வும் கௌரவிப்பு நிகழ்வும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தாதிய சமூகத்தினர் 2019 ஆம் ஆண்டிற்கான புளோரன்ஸ்நைற்றிங்கேல் சாமர்த்திய தலைவரை வடமாகாணத்தில் கடமைபுரியும் தாதியர்களுக்கிடையே தேர்வு செய்து கௌரவிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

மேற்படி நிகழ்விற்கு புதிய வாழ்வு நிறுவனம் **(New Life Foundation)** அனுசரணை வழங்குகின்றது.

தேர்வானது வட மாகாணத்தின் அரசவைத்தியசாலைகளில் கடமைபுரியும் தாதிய உத்தியோகத்தர்களின் வாக்கெடுப்பு மூலமாகவும் தேர்வுக்குழுவின் சிபாரிசின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

தெரிவு செய்யப்படுபவர் தாதியர் தினத்தில் கௌரவிக்கப்படுவார்.

சாமர்த்தியமான தலைவர் **(Smart Leader)** என்பவரிடம் எதிர்பார்க்கப்படும் பிரதான தகமைகள் நோயாளர் பராமரிப்பில் ஆர்வமுடன் காண்பிக்கப்படும் அர்ப்பணிப்புத்தன்மை, தொழில் சார் ரீதியான கல்வி முன்னேற்றத்திற்கான அவரது சேவை தான் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆற்றிய உதவி ஆகியனவாகும்.

இது சம்பந்தப்பட்ட மேலதிக தகவல்களுக்கு செ.பாலநாதன்:- 077 703 9865, (மா.பொ.வை. முல்லைத்தீவு), சி.விக்கினேஸ்வரன்:- 076 971 4452 (மா.பொ.வை. முல்லைத்தீவு) ஆகிய தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அடம்பனில் நஞ்சற்ற நெல் அறுவடை வயல் விழா




(மன்னார்)

எந்தவிதமான இரசாயனங்களும் பாவிக்கப்படாது இயற்கை வழியில் நெல் பயிர்ச்செய்கைப் பண்ணப்பட்ட நெல் அறுவடை விழா மன்னார் அடம்பன் பண்ணையில் மன்னார் மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஆதரவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில்வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், மன்னார் மாவட்ட மற்றும் வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் கே.எம்.ஏ.சுக்கூர், அடம்பன்விவசாயப்பண்ணை உரிமையாளர் உருத்திரமூர்த்தி, இயற்கை வழி விவசாய அமைப்புக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி என்.பிரபு உட்பட அதிகமான இயற்கை வழியில் நெல் பயிர்ச்செய்கையில் ஆர்வம் கொண்டுள்ள ஆண்,பெண் விவசாயிகள் கலந்து கொண்டிருந்தனர்.(2-285)

# விஞ்ஞானவார 2 ஆம் நாள் நிகழ்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான வாரத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு இந்துக் கல்லூரி வளாகத்தில் கல்லூரி ஆசிரியர் ச.சாரங்கா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

கண்காட்சித் தொடரின் இறுதியில் மாணவர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சை அதிபரின் வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (2-10)

# வீடு உடைத்து திருட்டு

(மன்னார்)

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பில் அமைந்துள்ள ஊடகவியலாளர் ஒருவரின் வீடு இனந்தெரியாதவர்களினால் உடைக்கப்பட்டு இரு கமராக்கள், ஒரு மடிக்கணனி என்பன களவாடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரினால் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல்வேளை நடைபெற்றுள்ளது.

வீட்டின் கதவு உடைக்கப்பட்டு மேற்படி பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான புலன் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-286-281)

# பாரதம்


## ஜம்மு-காஷ்மீரில் மண்சரிவு

(ஜம்மு)

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் தோடா மாவட்டத்தின் பதர்வா பகுதியில் நேற்று அதிகாலை மண்சரிவொன்று ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கிருந்த 30 இற்கும் மேற்பட்ட கடைகள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன.

இதையடுத்து, மீட்புப் பணிகள் இடம்பெற்று வருவதுடன் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாக தற்போது வரை எந்தத் தகவலும் இல்லை. (7)



## பொள்ளாச்சி பாலியல் விவகாரம்; தமிழகம் முழுவதும் போராட்டங்கள்




(சென்னை)

பொள்ளாச்சியில் நடைபெற்ற பாலியல் வன்முறையைக் கண்டித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தூத்துக்குடியில் கல்லூரி மாணவ, மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த வகையில் தூத்துக்குடியில் கல்லூரி மாணவ, மாணவிகள் நேற்று புதன்கிழமை வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, பொள்ளாச்சி பாலியல் வன்முறை சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி மாணவ, மாணவிகள் கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (7)

## பொள்ளாச்சியில் பாலியல் வன்முறை; ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கைது



(பொள்ளாச்சி)

பொள்ளாச்சியில் நடைபெற்ற பாலியல் வன்முறையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பொள்ளாச்சியில் நடைபெற்ற பாலியல் வன்முறையைக் கண்டித்து திருவள்ளுவர் திடலில் கனிமொழி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.


அப்போது பேசிய கனிமொழி, "பொள்ளாச்சி பாலியல் கொடூரம் தமிழகத்தையே தலை குனியச் செய்துள்ளது. ஏழு ஆண்டுகளாக இந்த கொடூரம் அரங்கேறியுள்ளது. ஆனால் 4 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கனிமொழியை பொலிஸார் கைது செய்தனர். எனினும் சிறிது நேரத்தில் அவரை பொலிஸார் விடுவித்தனர்.

பொள்ளாச்சியில் கல்லூரி மாணவிகள், பெண்களை ஆபாச படம் எடுத்து பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் பொள்ளாச்சி மாக்கினாம் பட்டியைச் சேர்ந்த நிதி முகாமையாளர் திருநாவுக்கரசு, சபரிராஜன், சதிஷ், வசந்தகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஆம் ஆத்மியுடன் கூட்டணி இல்லை

### ராகுல் காந்தி திட்டவட்டம்



(டில்லி)

ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி இல்லை என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

டில்லியில் கெஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதாவை வீழ்த்த அந்த கட்சி காங்கிரசுடன் கூட்டணி அமைக்க விரும்பியது. இது தொடர்பாக கெஜ்ரிவால் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை சந்தித்து ஆலோசனை நடத்தி இருந்தார். காங்கிரஸ் மேலிடம் ஆம் ஆத்மியுடன் கூட்டணி அமைக்க விரும்பியது. ஆனால் மாநில தலைமை அந்த கட்சியுடன் கூட்டணியை விரும்பவில்லை. இதை தொடர்ந்து ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிடுவதாக தெரிவித்து 6 தொகுதிக்கான வேட்பாளர்களை அறிவித்தது. ஆனாலும் இரு கட்சிகள் இடையே கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி இல்லை என்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள 7 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுவோம் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ராகுல் காந்தி கூறும்போது, "டில்லியில் உள்ள 7 தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றி பெறும். இதை பூத் லெவலில் உள்ள தொண்டர்கள் உறுதி செய்ய வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

## நிர்மலாதேவி பிணையில் விடுவிப்பு



கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்த முயன்றதாக தொடரப்பட்ட வழக்கில் நிர்மலாதேவியை உயர் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

குறித்த வழக்கு உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அருப்புக்கோட்டை தனியார் கல்லூரி மாணவிகளை தவறான பாதைக்கு அழைத்ததாக பேராசிரியை நிர்மலாதேவியும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக மதுரை காமராஜர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முருகன், ஆராய்ச்சி மாணவர் கருப்பசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முருகன், கருப்பசாமி ஆகியோர் நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் உச்ச நீதிமன்றம் மூலம் பிணை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## மனிதவுரிமை சட்டத்தரணிக்கு 38 ஆண்டுகள் சிறை

(தெஹ்ரான்)

ஈரான் மனித உரிமை சட்டத்தரணிக்கு 38 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஈரான் மனித உரிமை சட்டத்தரணியான நஸ்ரின் சோட்டோடே மீது நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நஸ்ரினுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை பற்றி அவரது குடும்பத்தினர் ஊடகங்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

மனித உரிமை செயற்பாடுகளுக்காக விருது பெற்ற நஸ்ரின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களால் அதிர்ச்சியடைந்துள்ளோம் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் பெண்கள் கட்டாயமாக முக்காடு அணிய வேண்டும் என்ற விடயத்துக்கு எதிராக போராடியவர் என பலராலும் அறியப்பட்ட சட்டத்தரணி நஸ்ரினே தற்போது தண்டனைக்குள்ளாகியுள்ளார்.

சட்டத்தரணி நஸ்ரினின் சிறைத்தண்டனையை ஈரானின் மத்திய மனித உரிமைகள் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளதோடு அவரது கணவர் பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## பிரேசில் அ…
## பலி எண்ண…



(பிரேசிலியா)

பிரேசில் நாட்டில் இரும்புத்தாது சுரங்கத்…
உள்ள அணை உடைந்த விபத்தில் சிக்கி உ…
ழந்தோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்…

பிரேசில் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உ…
புருமாடின்கோ நகரம் அருகே தனியாரு…
சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் உள்ளது.

இந்த சுரங்கத்தின் அருகில் பயன்படு…
படாமல் இருந்த ஒரு அணை தை மாதம் 25 …
திகதி திடீரென உடைந்தது.

அணையில் இருந்த தண்ணீர், சே…

## பஸ் பயணிகள் …

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பஸ் பயணிகள் 13 பேரை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர்.

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி வோஷிங்டன் பென்டகன் இராணுவ தலைமையகம் மீதும், நியூயோர்க் உலக வர்த்தக மையம் மீதும் அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்களை மோதி நடத்திய தாக்குதலில் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல்களை தொடர்ந்து அல்கொய்தா பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளித்து வந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அங்கு ஆட்சியில் இருந்த தலிபான்களை அமெரிக்கப் படையினர் விரட்டியடித்தனர்.

அதைத் தொடர்ந்து அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. ஆனால் சில ஆண்டுகளிலேயே அங்கு தலிபான்கள் மீண்டும் காலூன்ற தொடங்கினர். அங்கு அமெரிக்க கூட்டுப்

## வெனிசுவெலாவி…
## எண்ணெய் …

வெனிசுவெலாவிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்காது என்று நம்புவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பேம்பியோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வெளியுறவுச் செயலாளர் விஜய் கோக்லேவுடனான சந்திப்புக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ செய்தியாளர்களை சந்தித்தார்.

இந்த நிலையில் வெனிசு…

### அமெரி…

வெலா குறித்து …
சந்திப்பில் விவா…
டதா என்று செய்தி…
கேள்வி எழுப்பின…
த்து அமெரிக்க …
வுத் துறை அமை…
போம்பியோ கூறு…
"நாங்கள் ஒவ்வொ…
லும்கேட்பதுபோல…
விடும்இதனை …

வெனிசுவெல…
பதி மதுரோ அரச…

# வெளிநாடு

## அணை உடைந்து விபத்து ...ணிக்கை 200 ஆக உயர்வு!





...சுரங்கத்தில் ...சிக்கி உயிரி ...யர்ந்துள்ளது. ...தியில் உள்ள ...தனியாருக்கு ...உள்ளது. ...யன்படுத்த ...ாதம் 25 ஆம் ...னீர். சேறும் சகதியுமாக பெருக்கெடுத்து வெளியேறியது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். அணை வளாகத்தில் இருந்த உணவகம் சகதியில் முழுவதும் புதைந்தது.


அணையை ஒட்டியுள்ள பகுதியில் இருந்த நிறுவனங்கள், தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் பெருமளவிலான சகதி நிரம்பியதால், அவர்களின் வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன. தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

உள்ளூர் ஊடகத்தில் அண்மையில் வெளியான தகவலின்படி அணை விபத்தில் உயிரிழப்பு 188 ஆக உயர்ந்தது. மேலும், தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள், பொதுமக்கள் என பலரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரேசில் நாட்டில் இரும்புத்தாது சுரங்கத்தில் உள்ள அணை உடைந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 108 பேர் மாயமாகி உள்ளனர் எனவும். அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (7)

### பாலியல் புகார் எதிரொலி

## போப் பிரான்சிஸின் நிதி ஆலோசகருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை



(மெல்போர்ன்)

போப் ஆண்டவரின் நிதி ஆலோசகரான அவுஸ்திரேலியாவை சேர்ந்த கார்டினல் ஜார்ஜ் பெல்லுக்கு எதிரான பாலியல் வழக்கில் 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போப் ஆண்டவர் பிரான்சிஸ்சின் நிதி ஆலோசகர் கார்டினல் ஜார்ஜ் பெல் (வயது-75). அவுஸ்திரேலிய நாட்டை சேர்ந்த இவர் போப் ஆண்டவரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்.

மெல்பேர்ன் நகரில் ஆர்ச்பிஷப்பாக பணிபுரிந்தபோது, உள்ளூர் மத குருமார் மீது வந்த பாலியல் புகார்களை அவர் சரியான விதத்தில் கையாளவில்லை என்றும் புகார் கூறப்பட்டது.

இந்த வழக்கு குறித்த விசாரணை மெல்பேர்ன் நீதவான் நீதிமன்றில் தீவிரமாக நடந்து வந்த நிலையில், இரு ஆண்களை துன்புறுத்தியதாக கார்டினல் ஜார்ஜ் பெல்லுக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (7)

## போயிங் விமானங்களை இடைநிறுத்தப் போவதில்லை

### அமெரிக்கா திட்டவட்டமாக அறிவிப்பு

(வோஷிங்டன்)

போயிங் 737 மக்ஸ் விமான சேவைகளை இடைநிறுத்த போவதில்லை என அமெரிக்க விமானப் போக்குவரத்து அதிகாரசபை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

எதியோப்பிய விமான விபத்தை தொடர்ந்து எழுந்த செனட் சபை உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர் சங்கங்களின் அழுத்தங்களுக்கு மத்தியில் அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மேலும், போயிங் 737 மக்ஸ் விமானங்களை முடக்கி வைக்கும் செயற்பாடு அடிப்படையற்றது எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

அத்துடன், போயிங் 737 மக்ஸ் விமானத்தின் பாதுகாப்புக் குறித்து தாம் முழு நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அமெரிக்க விமானப் போக்குவரத்து அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

எதியோப்பியன் எயர்லைன்ஸ் விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விழுந்து நொறுங்கியதில் அதில் பயணித்த 157 பேர் உயிரிழந்தனர். போயிங் மக்ஸ் 8 ரக விமானம் கடந்த ஐந்து மாதங்களுக்குள் இவ்வாறு பாரிய விபத்திற்குள்ளான இரண்டாவது சந்தர்ப்பம் இது வாகும்.

குறித்த விபத்தை அடுத்து பிரித்தானியா, சீனா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல உலக நாடுகள் போயிங் ரக விமானங்களின் சேவைகளை நிறுத்திவைக்கத் தொடங்கின.

ஆனால், இவ்விமானங்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பானவை என போயிங் நிறுவனம் தொடர்ந்து உறுதியாக தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ...கள் 13 பேர் துப்பாக்கி முனையில் கடத்தல்



படைகள் தொடர்ந்து தங்கி இருந்து, பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டுவதில் உள்நாட்டு படைகளுக்கு பக்கபலமாக உள்ளன.

எனினும் ஆப்கானிஸ்தானில் பல்வேறு நகரங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான் பயங்கரவாதிகளை முழுமையாக ஒடுக்க முடியவில்லை. எனவே தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா முன்னெடுத்து வருகிறது.

தலிபான் பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இடையே பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடந்து வரும் அதே வேளையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடும் சம்பவங்களும் தொடர்கின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் படாக்சான் மாகாணத்தில் இருந்து உடல் நலம் பாதிக்கப்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று தலைநகர் காபூல் நோக்கி புறப்பட்டது. பாக்லான் மாகாணத்தில் உள்ள பாக்லான் இ மர்காஷி அருகே சென்றபோது பயங்கரவாதிகள் சிலர் பஸ்ஸை வழிமறித்தனர்.

அதன்பிறகு பஸ்ஸில் ஏறிய பயங்கரவாதிகள் 13 ஆண்களை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர். அவர்கள் எதற்காக கடத்தப்பட்டனர்? தற்போது அவர்களின் கதி என்ன? என்பது தெரியவில்லை.

இந்த கடத்தல் சம்பவத்துக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பு ஏற்கவில்லை. எனினும் பாக்லான் மாகாணம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகம் இருப்பதால், அவர்கள்தான் பஸ் பயணிகளை கடத்தி இருப்பார்கள் என இராணுவ அதிகாரிகள் குற்றம் சாட்டினர். (7)

## பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுப்போம்

### அமெரிக்காவிடம் பாகிஸ்தான் உறுதி

(வோஷிங்டன்)

இந்தியாவுடனான பதற்றத்தை தணிக்க பயங்கரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம் என்று அமெரிக்காவிடம் பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது. புல்வாமா தாக்குதலை தொடர்ந்து இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எல்லையில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை தணிக்க அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெக்மூத் குரேஷியையும், இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் விஜய் கோகலேயையும் அழைத்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர்ஜான்பால்டன்பேசினார்.

அப்போது பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஷ்- இ-முகமது மற்றும் பல பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான கடுமையான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்தியாவுடனான பதற்றத்தை தணிக்க பயங்கரவாதிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவரிடம் குரேஷி உறுதி அளித்தார். இந்த தகவலை ஜான் பால்டன் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோவுடன் இந்திய வெளியுறவு துறை செயலாளர் விஜய்கோகலே சந்தித்தார். அப்போது புல்வாமா தாக்குதல் குறித்தும், பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர். (7)

## ...ாவிடம் இந்தியா ...ப் வாங்காது

### ...மெரிக்கா நம்பிக்கை

...தறித்து அவர்கள் ...ல் விவாதிக்கப்பட் ...று செய்தியாளர்கள் ...ழுப்பினர். இதுகுறி ...மரிக்க வெளியுற ...ற அமைச்சர் மைக் ...யா கூறும் போது, ...ஒவ்வொரு நாட்டி ...னுபோலவே இந்தியா ...தனை கேட்கிறோம். ...ிசுவெலா ஜனாதி ...ரோ அரசியமிருந்து இந்தியா எண்ணெய் வாங்காது என்று நம்புகிறோம். இந்தியா வெனிசுவெலா மக்களுக்கு இடையே உள்ள அச்சத்தை புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். இது ஆரோக்கியமான உரையாடலாக இருந்தது.

இந்தியாவுக்கு எண்ணெய் இறக்குமதி செய்வதில் மூன்றாவது பெரிய நாடாக வெனிசுவெலா உள்ளது. (7)

## பிரதமர் தெரேசா மேயின் பிரெக்ஸிற் ஒப்பந்தம்

### நாடாளுமன்றில் இரண்டாம் முறையும் தோல்வி



(லண்டன்)

பிரதமர் தெரேசா மே-யின் திருத்தப்பட்ட பிரெக்ஸிற் ஒப்பந்தம் 149 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் தோல்வியடைந்தது.

இந்த வாக்கெடுப்பில் திருத்தப்பட்ட பிரெக்ஸிற் ஒப்பந்தத்திற்கு ஆதரவாக 242 வாக்குகளும் எதிராக 391 வாக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி திருத்தப்பட்ட பிரெக்ஸிற் ஒப்பந்தம் 149 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. (7)

# நாட்டின் உள்ளகப் பிரச்சினைக்காக சர்வதேசத்தை நாட அவசியமில்லை

## ஹர்ஷன எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டிய அவசியம் கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி இராணுவத்தினருக்கு எதிராக செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் இராணுவத்தினரும் பொலிஸ் பிரிவினரும் எவ்வாறு அரசியல்வாதிகளால் நடத்தப்பட்டார்கள் என்பது அனைத்து மக்களும் நன்கு அறிவார்கள்.

மேலும் தமது அரசியல் பிரசாரத்திற்காக இராணுவத்தினரை பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொள் வதை



எதிர்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இந்தியா-பாகிஸ்தான் நிலைமைகளை இலங்கை உன்னிப்பாக கவனிக்கும்

(கொழும்பு)

இந்தியா- பாகிஸ்தான் இடையிலான பதற்ற நிலை தீவிரமடையக் கூடாது என்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நிலைமைகளை இலங்கை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சாஹிட் அகமட் ஹஸ்மத் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, புல்வாமா தாக்குதலை அடுத்து ஏற்பட்டுள்ள பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

"இந்தியா- பாகிஸ்தான் இடையிலான நிலைமைகளை இலங்கை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பதற்றநிலை மோசமடையக் கூடாது.

இரண்டு நாடுகளும் எல்லாப் பிரச்சினைகளையும் அர்த்தமுள்ள பேச்சுக்களின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அதன்மூலமே, பிராந்தியத்தில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டை ஊக்குவிக்க முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 65 இலட்சம் ரூபா பெறுமதியான

# இரத்தினக்கல் கொள்ளையில் ஈடுபட்ட வெளிநாட்டுப் பெண் உட்பட ஐவர் கைது

(களுத்துறை)

களுத்துறை வடக்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற சுமார் 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரத்தினக்கல் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் வெளிநாட்டுப் பெண் ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி களுத்துறை வடக்குப் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மூன்று இரத்தினக்கல் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதன்படி களுத்துறை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கொள்ளையடிக்கப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஜீப் வண்டி ஒன்றுடன் நீர்கொழும்பில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

34, 36, 39 மற்றும் 43 வயதுடைய மதுகம, அங்கொட மற்றும் அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண் 43 வயதுடைய மொங்கோலிய நாட்டைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெளிநாடுகளின் நூல் பாவை அரசு நாட்டுக்குத் தேவையில்லை-தயாசிறி



(கொழும்பு)

நாட்டின் சுயாதீனத்தன்மை மலினப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான செயற்பாடுகளால் நாட்டின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அமெரிக்காவும் ஐரோப்பாவும் தலையீடு செய்கின்றன என்றும் தயாசிறி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளின் தேவைக்கு ஏற்ற வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என அவர் கொழும்பு ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளின் நூல் பாவை போன்றதொரு அரசாங்கம் நாட்டுக்குத் தேவையில்லை எனவும், மக்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிறுவர் உளவியல்

குழந்கைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பெரியவர்கள் பல பேருக்கு இது சரியாகத் தெரிவதில்லை! பெற்றவர்கள் சரியாக இல்லை என்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்து விடுகின்றன என்று நிபுணர்கள் எல்லோரும் சொல்கின்றார்கள்.

குழந்தைகளிடம் அன்பைக் காட்டுங்கள்... வேண்டாம் என்று சொல்லவில்லை!அது மென்மையாக இருக்கட்டும். முரட்டுத்தனமாக இருக்க வேண்டாம். "என் கண்ணே! என்று "சொல்லிக் கொண்டு பல்லை நறநற என்று கடித்துக் கொண்டு தான் சில பேர் குழந்தைகளிடம் பேசுவார்கள்! அவ்வளவு அழுத்தமான அன்பு.

முரட்டுத்தனமான அன்பை குழந்தைகளிடம் திணிக்கும் போது அதனுடைய உடம்பும் கெட்டுப் போகின்றது, மனதும் கெட்டுப் போகின்றது. ஒரு பன்னிரெண்டு வயதுப் பெண் குழந்தை... அவளுக்கு அடிக்கடி மயக்கம், வாந்தி. பல டாக்டர்களிடம் பரிசோதனை செய்தார்கள். மருந்து எல்லாம் கொடுத்துப் பார்த்தார்கள். எந்தப் பிரயோசனமும் இல்லை. போகப் போக அந்தப் பெண்ணுக்கு மனநிலை சரியில்லாமல் போய் கன்னாபின்னா என்று ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாமல் பேச ஆரம்பித்துவிட்டது.

இதற்குக் காரணம் என்ன என்பதை பல நாட்களுக்கு பின்பு தான் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தப் பெண்ணுடைய அப்பா, அம்மா அடிக்கடி சண்டை போட்டுக்குக் கொள்வார்களாம். அதை பார்க்கின்ற போதெல்லாம் இந்த குழந்தைக்கு வாந்தி வந்து விடும், மயக்கம் வந்துவிடும். கன்னாபின்னா என்று பேச ஆரம்பித்துவிடும். இரண்டு மூன்று நாளைக்கு இப்படி இருக்கும். பின்பு சரியாகப் போய்விடும்.

பெற்றோர்கள் சண்டை போடும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லாத உணர்வு, பயம் இதெல்லாம் மனதிலே தங்கிக் கொள்கின்றது. அப்பா, அம்மாவிடம் நெருக்கம் குறைகின்றது. அன்பு குறையுது. வெறுப்பு உண்டாகின்றது. மனநோய், உடல் நோய் இரண்டும் வந்துவிடுகின்றது.

இன்னொரு குழந்தை சின்ன வயதிலே ஆரோக்கியமாகத் தான் இருந்ததாம். வாலிப வயதுக்கு வந்தவுடனே ஆஸ்துமா நோய் வந்துவிட்டதாம். குடும்பத்திலே யாருக்கும் அந்த நோய் இல்லை. அந்தப் பெண்ணுக்கும் இதுவரைக்கும் எந்தத் தொல்லையும் வந்ததில்லை.

இதற்கு என்ன காரணம் என்பதை பின்புதான் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவர்கள் அப்பா மிகவும் கண்டிப்பாம். குழந்தைகள் கட்டுப்பாடாக வளர வேண்டும் என்று நினைக்கின்றவராம். யாராவது அழுதால் அவருக்குப் பிடிக்காது. குழந்தைகள் எங்கேயாவது அடிபட்டு அழுதால் கூட...

"மூடு வாயை... சத்தம் போட்டால்... அடிவிழும்...ஜாக்கிரதை" என்று கத்திப் பயமுறுத்தி அழுகையை அடக்கி விடுவாராம். அதனாலே அந்தப் பெண்ணுக்கு சின்ன வயதிலேயே அழுகையை அடக்கிப் பழகிப் போய்விட்டது.'பின்பு என்ன ஆகிவிட்டது தெரியுமா? அழ வேண்டிய விடயத்திற்குக் கூட அந்தப் பெண்ணாலே அழ முடியலே. மனதிற்குள்ளே வேதனை முட்டிய போதும் அழ முடியாது! கண்ணிலே தண்ணீர் வராது'' கடைசியிலே அது ஆஸ்துமாவாக வந்துவிட்டது.

ஒரு குழந்தை அழுதால்... "ஐயோ...இதுக்குப் போய் அழுவார்களா...? இது சின்ன விடயம்'' என்று பக்குவமாச் சொல்ல வேண்டும். அதுதான் நல்லது.

ஒரு ஆறு வயதுப் பையன் அவனுக்கு மனது, உடம்பு பாதிப்பு. ஆரோக்கியம் குறைந்து இரத்த சோகை ஏற்பட்டுப் போய்விட்டது.

அவன் உடை எப்பவும் சுத்தமாகத்தான் இருக்கும். வெளியே போய் விளையாடவே மாட்டான்.

காரணம் அவர்கள் அம்மாதான். உடை அழுக்காகப் போனால் அம்மா திட்டுவார்களாம். குழந்தைகள் காற்றோட்டமான இடத்திலே விளையாட வேண்டும். கீழே விழ வேண்டும்– காயம் பட வேண்டும் Friends கூட கருத்து வேறுபாடு வர வேண்டும்–அழ வேண்டும்–சரியாகப் போக வேண்டும். இது எல்லாம் இயற்கையான மனவளர்ச்சிக்கு உதவுகின்றது.வாழ்க்கை என்ன என்பதை அவர்கள் அங்கேதான் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். பிரச்சினைகளையே சந்திக்காமல் வளர்ந்துவிட்டால் எப்படி?

சிலபேர் பெருமையாகச் சொல்வார்கள்... என் பிள்ளை பள்ளிக்கூடம் விட்டால் நேராக வீட்டிற்கு வந்துவிடுவான். பாடப் புத்தகத்தை தூக்கி வைத்துக் கொள்வான். ஏனைய பிள் ளைகளுடன் எல்லாம் சேரவே மாட்டான் என்று ... இது நல்லதல்ல. சில பிள்ளைகள் படுக்கப் போகின்ற பொழுது விளையாட்டுப் பொம்மை– போர்வை இது மாதிரி எதையாவது துணைக்கு என்று எடுத்துக் கொண்டு போகும்.

அதை தடுக்காதீர்கள். பொம்மை அல்லது போர்வை ஒரு பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கின்றது. அதனாலே குழந்தை அமைதியாகத் தூங்கும். ஒரு அப்பா– மார்க் லிஸ்ட்டை கையிலே வைத்துக் கொண்டு மகனைத் திட்டினார்."கணக்கிலே நூற்றுக்கு 20 மார்க் வாங்கிருக்கின்றாயே. உனக்கு வெட்கமாக இல்லையா?" என்றார்.

"இல்லை" என்றான் பையன்."ஏன் ? " என்று கேட்டார். "இப்ப நீங்கள் கையிலே வைத்திருக்கிறது என்னுடைய மார்க் லிஸ்ட் இல்லை. இது உங்களுடையது. அம்மா தான் அதை பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். அதைத்தான் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தேன் "அப்படி என்றான் பையன்.

# நிறைவேற்றதிகாரத்துடன் முரண்படும் சட்டவாக்கத் துறை

## மகிந்தானந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**சட்டவாக்கத்துறைக்கும் - நிறைவேற்றதிரகாரத்திற்கும் இடையில் பாரிய முரண்பாடு காணப்படுவதாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்**

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே மகிந்தான்ந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அரசாங்கத்திற்குள் நெருக்கடி நிலை காணப்படுகிறது.

பிரதமரின் ஆட்கள் ஜனாதிபதியை தோற்கடிப்பது ஜனநாயகமா? நாடாளுமன்றம், அமைச்சரவை என சகல விடயங்களிலும் நெருக்கடி நிலை காணப்படுகிறது. அமைச்சரவையில் இணக்கப்பாடு இல்லை.

நிறைவேற்று துறைக்கும், சட்டவாக்கத்திற்கும், நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது. இவ்வாறு இருக்கும்போது எவ்வாறு ஆட்சியை கொண்டுநடத்துவீர்கள்?

அதேபோன்று பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது. இப்படியான நிலையில், எப்படி நாட்டை முன்னேற்றுவீர்கள்? வீட்டிற்குள் இருக்கும் நெருக்கடியை தீர்த்துக்கொள்ளுங்கள்.

அரசாங்கத்திற்குள்ளே இவ்வளவு பிரச்சினைகள் காணப்படுகின்ற போது, எதிர்க்கட்சியினரை சிறையிலடைக்க போராடுகின்றார்கள். எம்மை சிறையிலடைக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நித்திரை வராது" என மகிந்தானந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆசிரியர் ஆலோசகர் சேவை உருவாக்கப்படும்

(கொழும்பு)

ஆசிரியர்ஆலோசகர்சேவையை நிறுவுவதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்தார். ஆசிரியர்களுக்காக சம்பளக் கொடுப்பனவு கட்டமைப்பொன்றும் முன்வைக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சனுக்கு எதிரான வழக்கின் விசாரணை ஜூன் 12ஆம் திகதி



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பிலேயே இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்த கருத்து நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக தெரிவித்து அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்காக 32.58 மில்லியன் டொலரை கோருகிறது அமெ. இராஜாங்கத் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், 32.58 மில்லியன் டொலரை கோரியுள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் ஆகியவற்றுக்கு 40 பில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்யுமாறு, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில், 32.58 மில்லியன் டொலர் இலங்கைக்காக ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல், சிறிய/ இலகு ஆயுதங்களை அழித்தல், மரபுவழி ஆயுதங்களின் பாதுகாப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை முன்னேற்றுதல் ஆகியவற்றுக்கு 5 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் எல்லை பாதுகாப்பு திட்டத்துக்கு இலங்கைக்கு மூன்று இலட்சத்து 80 ஆயிரம் டொலரை ஒதுக்கவுள்ளதாகவும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், 2020இல் அனைத்துலக இராணுவ கல்வி மற்றும் பயிற்சிகளுக்காக இலங்கைக்கு 9 இலட்சம் டொலர் ஒதுக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லிந்துலை நகர சபையின் தவிசாளர் ரணில் முன் ஐ.தே.கவில் இணைவு



(தலவாக்கலை)

தலவாக்கலை லிந்துலை நகர சபையின் தவிசாளர் அசோக்க சேபால நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டார்.

அசோக்க சேபால கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியோடு இணைந்து செயற்பட்டு வந்தாலும் கட்சியில் அங்கீகாரம் கிடைக்காத தன் காரணத்தால் சில மாதங்களாக சுயாதீனமாக செயற்பட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் அவர் ஐ.தே.கவில் இணைந்து கொண்டார்.

இந் நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 'அப்பாவி மக்களுக்கு சுமையில்லை'

## பட்ஜெட் குறித்து ஜோன் அமரதுங்க



(கொழும்பு)

இந்தாண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டமானது, நாட்டின் அப்பாவி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாத வரவு- செலவுத் திட்டமென, சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

வரவு- செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான, 5ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டமானது, நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றவும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குமான, வரவு- செலவுத் திட்டமாகும்.

நாட்டின் செலவுகளைப் பார்த்தால் ஆச்சரியமாகவுள்ளது என தெரிவித்த அவர், எவ்வாறு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது எனவும் கேள்வியெழுப்பினார். இவ்வாறான பாரிய இடைவெளியுடனான வரவு-செலவுத்திட்டத்தை இதுவரைக் கண்டதில்லையெனவும், இவ்வாறு இருக்கும் போது, மிகவும் சிந்தனையுடன் நாட்டின் எதிர் காலத்தைப் பார்த்து, பல யோசனைகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, இலங்கையில் அதிக நிபுணர்களை உருவாக்குவதற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்காக பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதைப் போன்று, சுகாதாரத் துறைக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், கம்பரெலிய திட்டத்தால் கிராமங்களை கட்டியெழுப்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். எனவே, இந்த வரவு- செலவுத் திட்டமானது, நாட்டின் அப்பாவி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாது, அவர்களுக்கு பிரயோசமான வரவு- செலவுத் திட்டமாகுமெனவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இதன்போது, குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, நிதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட வரவு- செலவுத்திட்ட புத்தகத்தை புரட்டி அவர் சொன்னதையே நீங்கள் சொல்ல வேண்டாம் எனத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன் அமரதுங்க, நான் அவர் கூறியவற்றைக் கூறவில்லை. மாறாக அதிலுள்ள நல்ல விடயங்களையே இங்கு கூறினேன் எனப் பதிலளித்தார். (இ-7)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் வியாபார உரிமம், வியாபார வரி தொடர்பான அறிவித்தல்-2019

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2019 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக் கட்டணங்களை செலுத்தி 31.03.2019 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வியாபார உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(C-5769)

நகராட்சி மன்றம்,
திருமதி.சிவமங்கை இராமநாதன் சாவகச்சேரி
சாவகச்சேரி தவிசாளர். நகராட்சி மன்றம்

# ஜனாதிபதியின் தூரநோக்கு குறித்து உதய கம்மன்பில எம்.பி.பாராட்டு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுக் கூட்டத் தொடருக்கு தனது 3 பிரதிநிதிகளை அனுப்புவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானம் பாராட்டுக்குரியது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இவர்கள் அம்மாநாட்டில் கருத்துத் தெரிவிப்பதன் ஊடாக இலங்கை அரசாங்கத்தில் இரு கருத்துக்கள் கொண்ட குழுக்கள் இருப்பது உலகத்துக்கு தெரிய வரும்.

ஜனாதிபதியின் தூர நோக்கின் ஒரு நடவடிக்கையே இதுவெனவும் கம்மன்பில சுட்டிக் காட்டினார்.

பிவிதுரு ஹெல உறுமய நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அ'புரத்தில் அக்கிரமம்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் கர்ப்பிணிப் பெண்ணொருவரை அரசியல்வாதி தலைமையிலான குழுவினர் கொடுமையாக தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கெக்கிராவ பிரதேச சபையின் தவிசாளர் உட்பட 4 பேரால் கேட்ட சாப்பாடு தாமதமாகியதனால் கர்ப்பிணிப் பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பிர்தேச சபை தவிசாளர் உட்பட 4 பேர் கப் வாகனம் ஒன்றில் ஹபரண நகரத்திலுள்ள உணவகம் ஒன்றிற்கு சென்று ப்ரைட் ரைஸ் வழங்குமாறு கோரியுள்ளனர்.

எனினும் வழங்க தாமதமாகியதனால் உணவகத்தின் உரிமையாளர் மற்றும் 8 மாத கர்ப்பிணிப் பெண் மீது கடுமையாக தாக்கி உணவகத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

பிரதேச சபையின் தவிசாளர் உட்பட 4 பேர் இந்த சம்பவத்தில் தொடர்புபட்டிருப்பதாக ஹபரண பொலிஸாரிடம் உணவக உரிமையாளரான சம்பத் விஜேகுமார் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி மாலை 5 மணிக்கு குறித்த 4 பேரும் ப்ரைட் ரைஸ் வழங்குமாறு கோரியுள்ளனர். எனினும் அங்கு இல்லாமையால் தயாரித்து வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய பணத்தை செலுத்திவிட்டு சென்றவர்கள் மீண்டும் வராமையால் தயாரித்த ப்ரைட் ரைஸை வேறு ஒருவருக்கு உணவக உரிமையாளர் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் இரவு 8.40 மணியளவில் அதிக மதுபோதையில் வந்த பிரதேச சபையின் தவிசாளர், உணவக உரிமையாளரிடம் தான் வழங்கிய ஓடரை கேட்டுள்ளார்.

தாமதமாகியதனால்அதனை வேறு நபரிடம் வழங்கியதாக உரிமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் கோபமடைந்த பிரதேச சபை தவிசாளர் உணவகத்தை சேதப்படுத்தி உரிமையாளர்மற்றும் அவரது 8 மாத கர்ப்பிணி மனைவியையும் கொடூரமாக தாக்கியுள்ளார். (இ-7)

# பாடசாலை பஸ் சேவையை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி இந்த வருடத்தில் பாடசாலைச் சேவை பஸ்கள் 100, சேவையில் ஈடுபடுத்தப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையிலேயே, மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலை மாணவர்களுக்காக 1,400 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. எனினும், பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இதற்கமைய மாணவர்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பாடசாலைச் சேவையை விஸ்தரிக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ஜனக மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார். (இ-7)

# 8 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற அதிபர் கைது

(கொழும்பு)

தரம் 6இற்கு மாணவரொருவரை சேர்த்துக் கொள்வதற்காக 8,000 ரூபாய் பணத்தை இலஞ்சமாகப் பெற்றுகொண்ட பாடசாலை அதிபரொருவரை, இலஞ்ச,ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மாத்தறை - தெய்யந்தர பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 85 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 190 | 170 | 200 |
| தக்காளி | 60 | 40 | 35 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 90 | 60 |
| கோவா | 30 | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 80 | 80 | 120 |
| பூசணி | 50 | 30 | 35 | 40 |
| புடோல் | 100 | 50 | 70 | 60 |
| வாழைக்காய் | 80 | 120 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 85 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 80 | 60 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 400 |
| போஞ்சி | 120 | 70 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | – | 50 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 70 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 70 | 100 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | – | – | 100 | 80 |

# செய்தித்துளிகள்

## குழந்தைக்கு மது! தாய் முறைப்பாடு

(அம்பலாந்தோட்டை)

தனது 6 வயது ஆண் குழந்தைக்கு அயல்வீட்டில் இடம்பெற்ற திருமண வைபவமொன்றில் பலாத்காரமான முறையில் மது அருந்தச் செய்யப்பட்டுள்ளதாக அம்பலாந்தோட்டை - மொதரவள்ளிய பிரதேசத்தை சேர்ந்த தாயொருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த வீட்டிற்கு விளையாட சென்ற குழந்தை மீண்டும் வீடு திரும்பிய போது வாயில் இருந்து மது நாற்றம் வீசிய நிலையில் , அது தொடர்பில் குழந்தையிடம் தாய் வினவியுள்ளார்.. இதன்போது, திருமண வைபவம் இடம்பெற்ற வீட்டில் இருந்த நபரொருவர் தனக்கு ஒருவித பானத்தை அருந்தச் செய்ததாக குழந்தை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அம்பலாந்தோட்டை பொலிஸ் அதிகாரி தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட குழந்தையை அம்பலாந்தோட்டை வைத்தியசாலைக்கு அனுப்பி மருத்துவ அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 56 பேருக்கு திடீர் இடமாற்றம்!

(கொழும்பு)

பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 56 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேவை கருதி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## விபத்தில் பெண் உயிரிழப்பு! பிரபல இசையமைப்பாளர் ஜனநாத் கைதாகி மறியலில்

(கிரில்லவெல)

கிரில்லவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பில் பிரபல இசையமைப்பாளர் ஜனநாத் வரகாகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கிரில்லவெல பிரதேசத்தில் மஞ்சள் கடவையால் பாதையை கடக்க முற்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவர் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வரை கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டிருப்பதால் வேறு ஒரு தினம் வழங்குமாறு அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். அதன்படி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்திருத்தல் உள்ளிட்ட 17 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

பிரித்தானியாவிலுள்ள இலங்கைப் பெருந்தோட்ட முதலீட்டாளர்கள் ஓய்வு பெற்ற சேர். ஆதர் கோடனுடன் கூட்டுச் சேர்ந்து வடக்கிற்குப் புகையிரதப் பாதை அமைப்பதற்கு எதிராக சிலோன் சொசைற்றி என்ற அமைப்பை உருவாக்கினர்.

இலங்கைத் தேசாதிபதிகளினதும் ஆணைக்குழுவினதும் பெருந்தோட்டச் சொந்தக்காரரினதும் இந்த மனப்பாங்கு தமிழரை ஆத்திர மூட்டியது.

அவர்கள் தமது உணர்வுகளை உரத்த குரலில் அரசாங்கத்திற்கு தெரிவித்தனர். இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பெராக் போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழருடன் இணைந்து இலங்கைத் தமிழர் மனுக்கள், தீர்மானங்கள் என்பனமூலம் வடக்கிற்கு புகையிரதப் பாதையை அமைக்கும்படி விண்ணப்பித்தனர். இந்த விடயம் தொடர்ச்சியாகச் செய்திப் பத்திரிகைகளிலும் விவாதிக்கப்பட்டும் வந்தது.

இந்து ஓகன், மோணிங் ஸ்ரார் இரண்டுமே இவ் விடயம் சம்பந்தமான கட்டுரைகள், கடிதங்கள்,குறிப்புகள் என்பவற்றை வெளியிட்டன. தமிழர் தமக்குத் தெரிந்த எல்லா வழிகளிலும் தமது கசப்புணர்வையும் எதிர்ப்பையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார்.

ஹவ்லொக் தனது வாக்குறுதியை மீறியமையா லும், தமது கோரிக்கைக்கு எதி ராகக் கூட்டுச் சக்திகள் செயற்பட்டதனாலும் ஆத்திரமடைந்த தமிழர் இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கும் செயற்றிட்டம் ஒன்றை வகுப்பதற்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டினர்.

இக் கூட்டம் 1885 ஒக்டோபர் 29 ஆம் திகதி நடைபெற்றது. ஆனால் அக் காலத்தில் பதவியிலிருந்த தேசாதிபதியின் மனப்பாங்கினால் இக் கூட்டம் பெரும்பாலும் பயனற்றுப் போனது போல் தோன்றுகின்றது.

இருந்தபோதிலும், 1898 இந்து ஓகன் பத்திராதிபர் அறிக்கை சொல்வதைப் போன்று தமிழர் தொடர்ச்சியாக ஏறத்தாழ 15 வருடங்கள் இவ் விடயத்தையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி போராடினார்.

**கடந்த பதினைந்து வருடங்களாக யாழ்ப்பாணத்து மக்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு புகையிரத பாதையை அமைத்து எங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தலைநகருக்குச் செல்வதற்கு வசதி செய்யும்படி அரசாங்கத்தை மன்றாடிக் கொண்டிருக்கின்றனர்.**

**ஆனால் அரசாங்க மந்திரிகள் அநுராதபுரம் மட்டுமே புகையிரத சேவையைத் திறப்பதற்குக் கட்டளையிட்டுள்ளனர். அநுராதபுரம் மட்டுமே புகையிரத சேவை திறக்கப்பட்டால் தமிழராகிய எம்மால் என்ன செய்ய முடியும்!**

**மேலும் இலங்கையை நிர்வகித்த முன்னாள் தேசாதிபதி ஒருவர் ஒரு தடவை இந்தத் தமிழர் ஏன் தான் கொழும்புக்கு வர வேண்டும் என வினவியதாகச் சொல்லப்படுகின்றது.**

**இலங்கை அரசாங்கம் இந்த அளவுக்குத் தமிழரை வெறுத்தால் ஏன் எம்மை இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளக்கூடாது?.** இச் செய்திக் குறிப்பு தமிழ ரின் விரக்தியைத் தெளிவாக வெளியிடுகின்றது.




“ தமிழர் தமக்குத் தெரிந்த எல்லாவழிகளிலும் தமது கசப்புணர்வையும் எதிர்ப்பையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார். ஹவ்லொக் தனது வாக்குறுதியை மீறியமையாலும் தமது கோரிக்கைக்கு எதிராகக் கூட்டுச் சக்திகள் செயற் பட்டதனாலும் ஆத்திரமடைந்த தமிழர் இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கும் செயற்றிட்டம் ஒன்றை வகுப்பதற்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டினர் ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இந்த விரக்தியே தம்மை இலங்கைக் குடியேற்ற அரசாங்கம் ஆட்சி செய்வதைவிட இந்திய அரசாங்கம் ஆட்சி செய்தையே விரும்புகின்றோம் என்று கூறும் அளவுக்கு அவர்களைக் கொண்டு வந்திருந்தது.

தமிழ் மக்கள், இலங்கையில் ஏனைய சமுகத்தினரிலிருந்து தாம் வேறுபட்டவர்களாக உணர்ந்தமையையே இந்த அறிக்கை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது.

இதே ஆசிரியர் தலையங்கத்தின் கீழ் அநுராதபுரத்திற்குப் புகையிரதப்பாதை திறக்கப்படின் அப் பாதையோரமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழ் விவசாய விரிவாக்கமும் குடியேற்றச் செயற்பாடுகளும் தடைப்படுவது மாத்திரமன்றி சிங்களவர் இந்த இடங்களில் தமது விவசாயக் கருமங்களில் ஈடுபட்டு அவர்கள் அங்கு நிரந்தரமாகக் குடியேறு வதற்கு அது பொன்னான சந்தர்ப்பமாகிவிடும் என்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

**ஆனால் அரசாங்கம் இப்போது அநுராதபுரம் மட்டும் புகையிரதப்பாதை திறக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது. இது எறும்பு புற்றெடுக்கப் பாம்பு குடியேறுவது போல் என்ற தமிழ்ப் பழமொழியை ஒத்துள்ளது. இவ்வாறு எமது குரல்களை அசட்டை செய்கின்றது.**

**இது முறையா? நீதியா? அநுராதபுரம் மட்டுமே புகையிரதப்பாதை திறக்கப் படுவதனால் அது தெற்கிலுள்ள ஏது மற்ற சிங்களவர்களை தமிழர்கள் அங்கு செல்வதற்கு முன்னர் வன்னிக்குச் சென்று வன்னியின் செல்வத்தை அபகரிக்கத் தூண்டுகின்றது.**

**மீண்டும் யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப் பாதை திறக்கப்படுமானால் சனநெரிசலினால் வசிப்பதற்கு இடமின்றி மிகவும் கஷ்டப்படும் இங்குள்ள மக்கள் பெரும் பரப்பளவிலான வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்று புதிய பிரதேசங்களைப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தி அவற்றை வளமுள்ள நிலங்களாக மாற்றி அவற்றினால் பெரும் நலனடைவர்.**

(தொடரும்)



புலோலி, புற்றளை மகா வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் குகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இச் சிறுவர் சந்தை நிகழ்வு நெல்லியடி செலான் வங்கியின் ஆதரவுடன் இடம்பெற்றது.

# முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் கீழ் குறிப்பிடப்படும் பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப் படவுள்ளன. பயில விரும்புகின்றவர்கள் சுயமாக விண்ணப்பத்தைத் தயாரித்து, பயில விரும்பும் பயிற்சி நெறியைக் குறிப்பிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் , வலயக் கல்வி அலுவலகம், (முதலாம் கட்டையடி) பருத்தித்துறை, வடமராட்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் 2019. 03.20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிற்சி நெறிகளாவன,

வீட்டு மின் இணைப்பு 3 மாதம், இரண்டாம் மொழி சிங்களம் 6 மாதம், அலங்காரப் பொருள் உற்பத்தி சிரட்டை 3 மாதம், மனை முகாமைத்துவம் தையல் 3 மாதம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (5)





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வோதயம் மற்றும் வேர்ள்ட் விசன் நிறுவனத்தினால் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திறன் முகாமைத்துவ நிலையத்தில் நடத்தப்பட்ட "உறுதியான பெண்கள் ஆரோக்கியமான வாழ்வு" மாநாட்டில் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன், விசேட உரை ஒன்றினையும் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் சர்வோதயம் மற்றும் வேர்ள்ட் விசன் நிறுவனங்களின் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள். பெண்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ்.இந்துவின் ஆய்வுகள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் ஆய்வுகள் அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்படும் ஆய்வுகள் தினம் (2019) இன்று 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் அதிபர் சதா நிமலன் வழிகாட்டலில் நி.தனுரேஷ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டப்படிப்பின் கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் கலந்து கொள்வார். (5)

# யாழ்.மாநகர மக்களுக்கான பொது அறிவித்தல்

யாழ்.மாநகர எல்லைக்குள் இயங்கிவரும் வர்த்தக நோக்கிலான விடுதிகள், தங்குமிடங்கள், பிரத்தியேக தங்குமிட வீடுகள், தனியார் கல்வி நிலையங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்கள் என்பவற்றை இதுவரை பதிவு செய்யாதவர்கள், உரிமக் கட்டணங்கள் செலுத்தாதவர்கள், கட்டணங்களைச் செலுத்த தவறியவர்கள் மற்றும் அந்தந்த நிறுவனங்களுக்குரிய மாநகரின் நியமனங்களை பின்பற்றத் தவறியவர்கள் மாநகரசபையின் சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக தங்களையும் தங்கள் வியாபார மற்றும் சேவை நிலையங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் (2019.03.31) பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநகரசபையின் இந் நடவடிக்கைக்கு கட்டுப்பட்டு இம்மாத இறுதி 31 ஆம் திகதிக்குள் நடைமுறைப்படுத்த தவறுபவர்களுக்கு எவ்வித கருணையும், சலுகையும், கருணைக்காலமும் வழங்கப்படமாட்டாது என்றும் தவறுபவர்கள் தகுந்த சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் மாநகரசபையின் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் அறிவித்துள்ளார். (5)




# யோகர் சுவாமிகள் குருபூஜை

யோகர் சுவாமிகளின் 55 ஆவது குருபூசை எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.கொழும்புத்துறை சமாதிக் கோயிலும், யாழ்.சிவதொண்டன் நிலையத்திலும் நடைபெறவுள்ளது. (5)

# பஞ்ச கலச தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

தாவளை இயற்றாலை கல்வளைப் பிள்ளையார் ஆலயத்திற்கென புதிதாக அமைக்கப்பட்ட திராவிட மரபிலான பஞ்ச கலச (பஞ்சமுக) சிற்ப சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இத் தேரானது மட்டுவில் சாவகச்சேரி கலாகேசரி சிற்பாலய குழுவினரால் உருவாக்கப்பட்ட இலங்கையிலேயே முதலாவது பஞ்ச கலச திராவிட கலை மரபிலான தேர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-10)

# காவலரண்கள் அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அராலி சந்தி மற்றும் வங்களாவடி பகுதியில் பொலிஸ் காவலரண்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வேலணை பிரதேச சபைத் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி மற்றும் உறுப்பினர் பிரகலாதன் ஆகியோர் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

காங்கேசன்துறையிலுள்ள வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து தமது பிரதேசத்தின் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடிய போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சந்திப்பு தொடர்பில் வேலணை பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில், வேலணைப் பிரதேசத்தில் உள்ள பல வளங்கள் சட்டவிரோத கும்பல்களினால் சூறையாடப்படுவதாகவும் அதனால், நிலையான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் கூட இதுவரை பொலிஸார் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராகவிருந்த திருமதி.விஜயகலா மகேஸ்வரன் மூலமும் தெரியப்படுத்தி இதுவரை எந்த நடடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தல், கற்றாழை கடத்தல். இரும்பு கடத்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகள் பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. எனவே இரு இடங்களிலும் பொலிஸ் காவலரண்களை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளதாகவும் கூறினர்.

தமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை முன்னெடுக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளதுடன், பொலிஸ் காவலரண்கள் அமைக்க காணி ஏற்பாடு செய்து தரும் பட்சத்தில் பொலிஸ் காவலரண்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென தெரிவித்துள்ளார். (5-101)

# வடலியடைப்பில் இரத்ததானம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் இரத்ததானம் ஒரு உன்னத கொடை எனும் தொனிப்பொருளில் அன்புக்கும் நேசத்துக்கும் உரிய அமரர்.ச.கணநாத்தின் நினைவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை குருதி சேகரிப்பு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி வைத்தியர் திருமதி. ம.நந்தினி தலைமையிலான குழுவினர் இதில் கலந்து கொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அமரரின் நினைவாக அவரது நண்பர்களால் ஐந்தாவது முறையாக ஏற்பாடாகி இடம்பெற்ற இக் குருதிதான நிகழ்வில் 50 தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் குருதிதானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# செல்லையாவின் படைப்புக்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் படைப்புக்கள் உள்ளடங்கிய பெருந்தொகுதியின் வெளியீட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யா/தேவரையாளி இந்துக் கல்லூரி க.மூ.சின்னத்தம்பி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்பீடப் பேராசிரியர் மா.கருணாநிதி தலைமை வகிக்கவுள்ளார்.


வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடாதிபதி கலாநிதி அ.புஸ்பநாதனும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சி. வன்னியகுலம் ஆகியோர் வழங்குவர்.

நூலின் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவரும் எழுத்தாளருமான இ.இராஜேஸ் கண்ணன், நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபனும் மதிப்பீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் வழங்குவர். (5)

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அரசாங்கத்திற்கு உரித்தான காணிகளை சட்ட ரீதியற்ற வகையில் அனுபவிக்கும் அல்லது வதியும் நபர்களை அந்தக் காணிகளிலிருந்து வெளியேற்றி, கைப்பற்றி மீண்டும் அரசாங்கத்தின் வசமாக்கும் முகமாக 1979 ஆம் ஆண்டு அரச காணி (உடைமை மீளப்பெறல்) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அந்தக் கருமமும் இந்தக் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு அரசியலமைப்பினது 13ஆவது திருத்தத்தின் 11 ஆம் அட்டவணைக்கு அமைய காணிகள் பற்றிய விடயப் பணிகளின் ஒரு பாகம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டது. அதேபோன்று மாகாணங்களுக்கு இடையிலான அபிவிருத்தித் திட்டத்துடன் சம்பந்தப்படும் காணிகளின் நிர்வாகம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினது கருமங்களின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த காணி நிர்வாக விடயங்களை இலகுபடுத்தும் பொருட்டு காணிப் பிரதி ஆணையாளர், காணி உதவி ஆணையாளர், குடியேற்ற உத்தியோகத்தர், கள ஆலோசகர் முதலிய அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணிகளின் நிர்வாகம் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினது கருமங்களின் கீழ் உள்ள போதிலும் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தின் பரிந்துரையின் கீழ் மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் நடைமுறைப்படுத்துவது மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் மற்றும் பிரதேசச் செயலாளர் ஆகியோரே. அவர்களுக்கு இவ்வதிகாரம் 1992.11.13 திகதிச் சட்டமான "பிரதேசச் செயலாளருக்கு மாற்றப்பட்ட சட்டங்கள் **(Transfer of Powers Divisional Secretaries)**" ஊடாகக் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

> **காணிகளை நிர்ணயித்தல் என்பது இலங்கை நாட்டில் இருக்கின்ற அனைத்துக் காணிகளில் அரசாங்கக் காணிகள் யாவை? தனியார் காணிகள் யாவை? என்பதைத் தீர்மானிப்பதாகும்**

**➢காணிகளை நிர்ணயித்தல்**

காணிகளை நிர்ணயித்தல் என்பது இலங்கை நாட்டில் இருக்கின்ற அனைத்துக் காணிகளில் அரசாங்கக் காணிகள் யாவை? தனியார் காணிகள் யாவை? என்பதைத் தீர்மானிப்பதும், தனியார் காணிகள் எனத் தீர்மானிக்கப்பட்ட காணிகளைச் சம்பந்தப்பட்ட மரபுரிமையாளர்களுக்கு ஒப்படைப்பதும், அக்காணிகளுக்காக அவர்களுக்கு காணி வரைபடங்களை வழங்குவது, அரசாங்கத்துக்குரிய காணிகளை அரசாங்கத்துக்கு ஒப்படைப்பது போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கிய நடைமுறை காணி நிர்ணயம் எனக் கருதப்படுகிறது.

**➢ இலங்கைக்குக் காணி நிர்ணயம் தேவைப்பட்டது ஏன்?**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பின்னணியொன்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குக் காணி நிர்ணயம் தேவைப்பட்டது. 1815 வரை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையர்கள் காணிகளின் அனுபவ உரிமைகளை அனுபவித்தாலும், அக்காணிகளின் உரிமை மன்னரிடமிருந்ததால் பிரஜைகளிடம் உரிமை ஒப்படைக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறிருந்த போது 1815ஆம் ஆண்டு இலங்கை முழுமையாகப் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததையடுத்து மன்னராட்சி முறை ஒழிந்தது. பிரித்தானியர்களினால் 1840ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கக் காணிகளில் அத்துமீறல் தடைக் கட்டளைச் சட்டம் **(No. 12 of 1840- The Prevent Encroachments upon Crown Lands)** பிரகடனப்படுத்தப்பட்டது. எவரேனும் ஆளொருவருக்குத் தனது காணி தனக்குரியது என உறுதிப்படுத்த முடியாவிட்டால், அக்காணி அரசுடைமையாகும் என அக்கட்டளைச் சட்டத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தை உருவாக்கியபோது இலங்கையர்கள் பரம்பரையாக அனுபவித்ததையும் பயிர்ச்செய்கையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் தங்கள் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உரித்துறுதி, உரிமைச்சான்று, கொடையளிப்பு உறுதி போன்ற எழுத்துமூல சாட்சியங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனப் பிரித்தானியர்கள் கருதினர். இக் கட்டளைச் சட்டத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இலங்கையர்கள் இழந்துவிட்டனர்.

> **ஆயிரக்கணக்கான ஆண்டு களாக இலங்கையர்கள் காணிகளின் அனுபவ உரிமைகளை அனுபவித்தாலும், அக்காணிகளின் உரிமை மன்னரிடம் இருந்ததால் பிரசைகளிடம் உரிமை ஒப்படைக்கப்படவில்லை.**
>
> **இலங்கை பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததையடுத்து இலங்கையர்கள் தமது காணி தமக்குரியது என உறுதிப்படுத்த காணி நிருணயச் சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டது.**

இந் நிலைமை இலங்கையர்களின் கடும் எதிர்ப்புக்கும் மனக் கவலைக்கும் காரணமாக அமைந்ததோடு, 1848ஆம் ஆண்டில் மலைநாட்டில் மாபெரும் கலகமொன்று நிகழ்வதற்கும் காரணமாக அமைந்துவிட்டது. இதனால் பிரித்தானிய அரசாங்கம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கக் காணிகள் யாவை? தனியார் காணிகள் யாவை? என்பதைத் தீர்மானிப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அச் செயற்பாடு 1897ஆம் ஆண்டின் முதலாம் இலக்கத் தரிசுநிலக் கட்டளைச் சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. **(No.1 of 1897- An Ordinance relating to Claims to Forest, Chena Waste and Uncoupled Lands)**

**➢ காணி நிர்ணயத் திணைக்களம்**

1903ஆம் ஆண்டு தனித் திணைக்களமாகக் காணி நிர்ணயத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. திணைக்களம் தொடங்கி சில காலத்திற்குப் பின்னர் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அக்காலச் சட்டங்கள் போதுமானவையாக அமையாததால், அதற்காக 1931ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கக் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முதல் முறையாக அரச சட்டமொன்றின் மூலம் ஆட்களுக்கு காணி உரித்தை வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

> **நிர்ணயப் பணிகளின்போது காணி நிர்ணயத் திணைக்களத்திற்கு உதவுகின்ற நிறுவனங்களாக நில அளவைகள் திணைக்களம், அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பிரதேசச் செயலகங்கள்.**
>
> **காணி சம்பந்தமான வழக்கின் போது உதவும் அனைத்து மாவட்ட நீதிமன்றங்களும் பிஸ்கால் அலுவலகங்களும் அறிக்கைகளை அச்சிட்டுத்தரும் அரசாங்க அச்சகத் திணைக்களம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.**

➢காணி நிர்ணயத் திணைக்களத்திடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய தகவல்கள்.

➢தரிசுநிலக் கட்டளைச் சட்டம் மற்றும் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் அரச, தனியார் காணிகள் பற்றி நிர்ணயம் செய்து முடிக்கப்பட்ட கிராமங்கள் பற்றிய விபரங்கள்.

> **அரசாங்கத்துக்குரிய காணிகள் எனப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்ற காணிகள் தொடர்பான தகவல்கள் காணி நிர்ணயத் திணைக்களத்திடம் இருந்து பெற முடியும்.**

➢தரிசுநிலக் கட்டளைச் சட்டம் மற்றும் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் நிர்ணயம் செய்து முடிக்கப்பட்ட கிராமங்களில் நிர்ணயத்திற்குச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாத அரச காணிகள் தொடர்பான விபரங்கள்.

➢காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தனியார் காணிகள் மற்றும் ஆட்கள் தொடர்பான தகவல்கள்.

➢காணி நிர்ணயத் திணைக்களத்தினால் அரசாங்கத்துக்குரிய காணிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்ற காணிகள் தொடர்பான தகவல்கள் என்பனவாகும்.


**➢ நிலஅளவைத் திணைக்களம் ஆரம்பம்**

நாட்டின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட வீதிப் பொதுவேலை; விவசாயம், நீர்ப்பாசனம், போன்றவற்றிற்கான காணி அளவைகளை மேற்கொள்வதற்காக, பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1800 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இலங்கை நிலஅளவைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் அரச காணிகளை தனியாருக்கோ அல்லது கம்பனிகளுக்கோ விற்பனை செய்வதற்கு தேவையான நில அளவைப் படங்களை தயாரித்த இத்திணைக்களம் அரச காணி சார்ந்த காணிச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதால் அதற்கான நில அளவைகளைச் செய்ய வேண்டியேற்பட்டது.

**(தொடரும்...)**

# சிறுவர் அரங்கம்

## பட்டத்து யானை



முன்னொரு காலத்தில் மகத நாட்டு அரண்மனையில் பட்டத்து யானை ஒன்று இருந்தது. அதன் மீது அமர்ந்து செல்வதைப் பெருமையாக நினைத்தான் அரசன். அதற்கு எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டான். அரண்மனை லாயத்தில் அந்த யானை உண்டு கொண்டிருந்தது. பசியால் வாடிய நாய் ஒன்று அங்கே வந்தது. எலும்பும் தோலுமாகப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது அது.

யானை உண்ட போது சிந்திய உணவை அது பரபரப்புடன் உண்டது. இதைப் பார்த்து இரக்கப்பட்ட யானை அதற்கு நிறைய உணவைத் தந்தது. அதுவும் மகிழ்ச்சியுடன் உண்டது. அதன் பிறகு அது நாள்தோறும் அங்கே வரத் தொடங்கியது. யானையும் தன் உணவை அதற்குத் தந்தது.

நாளாக நாளாக அவை இரண்டும் நெருங்கிய நண்பர்கள் ஆயின. எப்போதும் இணை பிரியாமல் இருந்தன. நாள்தோறும் நிறைய உணவு உண்டதால் அந்த நாய் கொழுத்துப் பருத்தது. அழகாகக் காட்சி அளித்தது. அங்கே வந்த செல்வர் ஒருவர் அந்த நாயைப் பார்த்தார். அதைத் தன் வீட்டில் வளர்க்க விரும்பினார்.

பாகனிடம் அவர், "இந்த நாய்க்கு விலையாக நூறு பணம் தருகிறேன்!" என்றார்.

பணத்தாசை கொண்ட அவன் அந்த நாயை அவரிடம் விற்று விட்டான். தன் நண்பனை நினைத்து அந்த யானை உணவு உண்ணவில்லை. எப்போதும் கண்ணீர் வடித்தபடியே இருந்தது. அதை அறிந்த அரசன் அரண்மனை வைத்தியர்களை அனுப்பி யானையை சோதிக்கச் சொன்னான். பட்டத்து யானையைச் சோதித்த அவர்கள் அரசனிடம் வந்தனர்.

"அரசே! பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை. அது ஏன் உணவு உண்ணவில்லை? கண்ணீர் வடிக்கிறது என்பது புரியவில்லை!" என்றனர்.

என்ன செய்வது என்று குழம்பிய அரசன் அமைச்சரை அழைத்தான். "பட்டத்து யானைக்கு எந்த நோயும் இல்லை என்று வைத்தியர்கள் சொல்கின்றனர். நீங்கள்தான் எப்படியாவது அதைக் குணப்படுத்த வேண்டும்!" என்றான்.

அறிவு நிறைந்த அந்த அமைச்சர் லாயத்திற்கு வந்தார். உடல் மெலிந்து கண்ணீர் வடித்தபடி இருந்த யானையைப் பார்த்தார். அதன் முன் வைக்கப்பட்டு இருந்த சுவையான உணவு வகைகள் அப்படியே இருந்தன. "இந்த யானைக்கு ஏதோ துன்பம் நிகழ்ந்து உள்ளது. கண்டிப்பாக அது பாகனுக்குத் தெரிந்திருக்கும்" என்று நினைத்தார் அவர்.

பாகனை அழைத்த அவர், "அண்மையில் இந்த யானையைத் துன்பப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளது. அது உனக்குத் தெரிந்திருக்கும். அது என்ன என்ற உண்மையைச் சொன்னால் நீ உயிர் பிழைப்பாய்" என்று மிரட்டினார்.

வேறு வழியில்லாத அவன், "இங்கே கொழுகொழுவென்று நாய் ஒன்று இருந்தது. அதுவும் இந்த யானையும் எப்போதும் ஒன்றாகவே இருந்தன. அந்த நாயைச் செல்வந்தர் ஒருவர் விலைக்குக் கேட்டார். நானும் விற்று விட்டேன். அன்றிலிருந்து இந்த யானை எதையும் உண்பது இல்லை. கண்ணீர் வடித்தபடி உள்ளது!" என்றான். "அந்த நாயை மீண்டும் இங்கே கொண்டுவா!" என்றார் அமைச்சர்.

அவனும் நாயுடன் அங்கே வந்தான். படுத்து இருந்த யானை தன் நண்பனைப் பார்த்ததும் எழுந்தது. அந்த நாய் வாலை ஆட்டியபடியே யானையின் அருகே ஓடியது. மகிழ்ச்சியாகக் குரைத்தது. யானை அதைத் தன் துதிக்கையால் தடவிக் கொடுத்தது.

உணர்ச்சி மிகுந்த இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தார் அமைச்சர். விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா என்று வியப்பு அடைந்தார். அரசனைச் சந்தித்த அவர் நடந்ததை எல்லாம் சொன்னார்.

"சில நாட்களில் பட்டத்து யானை பழைய நிலையை அடைந்துவிடும்!" என்றார். அவர் சொன்னது போலவே அந்த யானையும் பழைய பெருமித நிலையை அடைந்தது.

## பழமொழிகளும் விளக்கமும்

- புண்பட்ட மனதை புகை விட்டு ஆற்று.

**பொருள்:-**
மனது புண்பட்டிருக்கும் போது புகை விட்டு (புகையிலை) ஆற்றிக்கொள்ள வேண்டும்.

**உண்மையான பொருள்:-**
புண்பட்ட மனதை புக விட்டு ஆற்று.
மனது புண்பட்டிருக்கும் போது, தமக்கு பிடித்த வேறொரு செயலில் மனதை புக விட்டு ஆற்றிக் கொள்ள வேண்டும் என்பதே சரி.

- விருந்தும் மருந்தும் மூன்று நாள்.

**பொருள்:-**
விருந்துக்கு சென்றால், மூன்று நாட்களுக்கு மேல் இருக்கக் கூடாது. மருந்து உட்கொண்டாலும் மூன்று தனி மனிதனையும் பாதிக்கும்.

**உண்மையான பொருள்:-**
ஒரு வாரத்தில் ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய குளிர் நாட்களில் நன்றாக உணவு உட்கொள்ள வேண்டும். செவ்வாய், வெள்ளி, வியாழன் ஆகிய தினங்களில் உணவை குறைவாய் உட்கொண்டு மருந்து உண்ண வேண்டும்.

## உலகின் மிகச்சிறந்த 10 சிறுவர் பொழுதுபோக்குகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

### மீன் பிடித்தல்



பெற்றோருடன் ஓய்வாய் இருந்து நீரோடைகளை இரசித்து மீன் பிடித்தல்மூலம்அவர்களின்பொறுமை, ஆர்வம், தன்னம்பிக்கை, குறிக்கோள் என்பன அதிகரிக்கும். அத்துடன் சிறந்த நன்னடத்தை உடையவராக மனம் கொண்டவராக மாறுவார்கள்.

### நாணயங்கள் சேகரித்தல்



நாணயங்களை சேகரிப்பதன் மூலம் சிறுவர்கள் ஒவ்வொரு நாட்டிற்குமுரிய நாணயங்களின் பெயர்கள், பெறுமதி மற்றும் அந்த நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு, மொழி, சமயம் என்பனவற்றை நினைவில் வைப்பதுடன் பணம் சேமிப்பின் முக்கியத்துவத்தினை சிறுவயதினில் இருந்தே வளர ஆரம்பிக்கும். அத்துடன் பகிர்தல், கணக்கிடல் மற்றும் ஒன்றிணைத்தல் தொடர்பான விருத்திகள் மேம்படும்.

(தொடரும்...)

ஒரு விரல் புரட்சியே இருக்குதா உணர்ச்சியே...
– பாடலாசிரியர் விவேக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களே! உங்கள் தீர்ப்பைக் கூறுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பித்திருக்கின்ற நிலையில்,

இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழுங்கக்கூடாது என்பதில் தமிழ் மக்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் போதுமானது. இனியும் கால அவகாசம் வழங்காமல் இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுப்பதற்கான அடுத்த கட்ட முயற்சிகளில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் ஈடுபட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாடு நியாய பூர்வமானது என்பது மறுக்கமுடியாத உண்மை.

அதாவது இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் என்பது ஐ.நா மனித உரிமை ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கானது.

ஆனால் கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு காலம் கடத்தல் என்ற தந்திரோபாயத்தின் ஊடாக சம்பந்தப்பட்ட விடயத்தை வலுக்குறைக்க முற்படுகிறது.

உண்மையில் ஐ.நா மனித உரிமை ஆணையத்திடம் கால அவகாசம் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் பெரும் பகுதியை நிறைவேற்றி இன்னமும் ஒரு சிறு பகுதியே எஞ்சியிருக்கிறது. எனவே கால அவகாசம் தாருங்கள் என்று கேட்டால் அது நியாயமானது.

ஆனால் எந்த நிபந்தனையையும் நிறைவேற்றாமல் ஒவ்வொரு தடவையும் கால அவகாசத்தைக் கோருவதென்றால், அதன் உண்மையான நோக்கம் ஐ.நா மனித உரிமை ஆணையத்தையும் சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றுவதேயாகும்.

இதனையே ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிகத் தெளிவாகத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எனவேதான் தமிழ் மக்கள் கால அவகாசம் வழுங்கக்கூடாது என வலியுறுத்துகின்றனர்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கால அவகாசம் வழங்குவதை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

அதாவது இலங்கை அரசுக்குச் சார்பாகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கால அவகாசம் வழங்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்குமாயின்,

அந்தக் கோரிக்கையை ஐ.நா மனித உரிமை ஆணையம் ஏற்றுக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஒரு அரசியல் கட்சியாகும்.

எனவே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்க் கட்சி ஒன்று கால அவகாசத்தை ஆதரிக்கும்போது, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஒட்டுமொத்த பொது அமைப்புகளினதும் கோரிக்கை அடிபட்டுப் போய்விடும்.

எனவேதான் கால அவகாசம் வழங்குவதை கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும் என்றும் அதனை அவர்கள் செய்யத் தவறின் அவர்களுக்கான தமிழ் மக்களின் தீர்ப்பு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது தீர்ப்பாக அறிவிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான விடயமாகும்.

## சர்வதேச குற்றவியல் நீதி விசாரணை கோரும் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு

ஐ.நா பாதுகாப்புச் சபையூடாக சர்வதேச குற்றவியல் நீதி விசாரணை கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கை இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுக்களால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை என்ன என்பது யுத்தம் முடிந்து 10 ஆண்டுகளாகியும் தெரியாமல் உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக தமது உறவினர்களைத் தேடி அலையும் மக்கள் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றவர்களாக கடந்த இரண்டு வருடங்களாகத் தமது உறவுகளைத் தேடி வீதிகளில் போராட்டம் நடத்தி வருகின்றார்கள். அவர்களது கோரிக்கைகளை இலங்கை அரசு கருத்தில் எடுக்கவும் இல்லை எடுக்கப் போவதும் இல்லை.

ஆனால் தாம் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகக் காட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை உருவாக்குதல் போன்ற சில ஏமாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வருகின்றது. மறுபுறம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நெருக்கடி கொடுத்தும், ஏமாற்றியும் தேடும் முயற்சியை கைவிடச் செய்து மரணச் சான்றிதழ் பெறவைக்க அரச இயந்திரம் முயன்று வருகின்றது.

அத்துடன் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலைக் குற்றங் கள் தொடர்பில் இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைகளை ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் அல்லது விசேட குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் முன்னெடுகப்பட வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படல் வேண்டுமென வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) கட்சியினராகிய நாம் பூரண ஆதரவு தெரிவித்துக் கொள்கின்றோம்.

சர்வதேச சமூகத்திற்கு ஒற்றுமையாய் ஓரணியில் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்த பொது நிறுவனங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களைச் சார்நதவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அணி திரளுமாறு அன்புடன்அழைகின்றோம். பல்கலைக்கழக மாணவர்களது போராட்டத்திற்கு வலுச்சேர்ப்போம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மிளகாய்த் தூள் எதிர்க்கட்சி "புளியங்காய் அரசாங்கம்"
### சபையில் கிண்டலடித்த ரணில்

(கொழும்பு)

எதிர்க்கட்சியை மிளகாய்த் தூள் எதிர்க்கட்சி என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கிண்டலடித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு கிண்டலடித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை எதிர்க்கட்சியினர் புளியங்காய் அரசாங்கம் என விமர்சிக்கின்றனர். எனினும் எங்களுடைய அரசாங்கம் புளியங்காய் அரசாங்கம் இல்லை. எதிர்க்கட்சி மிளகாய்த் தூள் எதிர்க்கட்சியாகக் காணப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் மிளகாய்த்தூள் தாக்குதல் மேற்கொண்டு நாடாளுமன்றத்தின் அதியுயர் தன்மையை எதிர்க்கட்சியி னர் கேள்வக்குறியாக்கி யமையை மக்கள் மறந் திருக்க மாட்டார்கள்" என பிரதமர் மேலும தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி கென்யா பயணம்

(கொழும்பு)

கென்யாவின் நயிபோர் நகரில் இடம்பெறவுள்ள, ஐக்கிய நாடுகள் சூழலியல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, கென்யா அரசின் விசேட அழைப்பையேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக்காலை அங்கு பயணமானார்.

கென்ய ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார். 'சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் நிலையான நுகர்வு மற்றும் உற்பத்திக்கான புதிய தீர்வுகள்' என்ற தொனிப் பொருளில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமான இந்த மாநாடு 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று விசேட உரை நிகழ்த்தவுள்ளார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நானாட்டான், பெரிய கரைசல், அச்சங்குளம், நொச்சிக்குளம், நானாட்டான், செம்மண்தீவு, பூவரசங்குளம், முருங்கன்பிட்டி, பிடாரிக்குளம், மாவிலங்கேணி, அளவக்கை, பள்ளங்கோட்டை, சூரியகட்டைக் காடு, மணற்குளம், இலந்தமோட்டை, பாலம்பிட்டி, தட்சணா மருதமடு, தட்சணாமருதமடு நீர்ப்பாசனம், செம்மண்தீவு **Ware House,** டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## ஐ.நா.தபால் நிலையமல்ல! ஆளுநரின் நடவடிக்கைக்கு
### சமரசிங்க கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஒன்றும் தபால் நிலையம் அல்ல என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்ற த்தில் நடைபெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் மகிந்த சமரங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கை சார்பில் விளக்கமளிப்பதற்காக குழு ஒன்று ஐ.நா.செல்லவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தலைமையில் செல்லவுள்ள அந்தக் குழுவில் நானும் உள்ளக்கப்பட்டிருந்தேன். இதுதொடர்பாக நேற்று முன்தினம் மாலை நாங் கள் ஜனாதிபதி தலைமை யில் கூடி ஆராய்ந்திருந்தோம்.

இதன்போது நான் ஜனாதிபதியிடம் கூறினேன். நான் இம்முறை இந்தக் குழுவுடன் இணைந்து செல்லவில்லை. நான் கடந்த 10 ஆண்டுகளாக அங்கு சென்று வருகின்றேன். இதன் காரணமாகவே இம்முறை செல்லவில்லை.

அத்துடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அந்த செய்தியில் வடக்கு மக்கள் சார்பாக அவர்களால் கையளிக்கப்படவுள்ள மகஜர்களை வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஐ.நாவில் சென்று கையளிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு ஆளுநரால் இவ்வாறு ஒன்றும் செய்ய முடியாது. ஐ.நா. ஒன்றும் தபால் நிலையம் அல்ல. இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்" எனவும் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். (இ-7)

## சத்திய தரிசனம்
### இனிய சொல் பேசுங்கள்



❖ நமக்குத் தேவையானவற்றை தருவதற்கு கடவுள் தயாராயிருக்கிறார். உங்களை முழுமையாகக் கடவுளிடம் ஒப்படைத்து, அவரருளை வேண்டுங்கள்.

❖ கல்லையும், மண்ணையும், காகிதத்துண்டையும் கடவுள் நிலைக்கு உயர்த்துங்கள். ஆனால், கடவுளைக் கல்லாகவும், காகிதத் துண்டாகவும் கீழான நிலைக்கு இறக்கிவிடாதீர்கள்.

❖ மனிதன் கடவுள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

❖ வைரத்துக்குப் பதிலாக கரியை ஆண்டவனிடம் கேட்காதீர்கள். நிலையான இன்பத்தை அவரிடம் யாசிக்க வேண்டுமே தவிர, நிலையற்ற உலக இன்பத்துக்காக பிரார்த்திக்கக் கூடாது.

❖ குயிலுக்கு இனிய குரலும், காகத்துக்கு கொடிய குரலும் உள்ளது. நம்முடைய புனிதமான நாக்கை இனிய சொற்கள் பேசவே பயன்படுத்த வேண்டும்.

❖ கடவுளின் வங்கியில் செல்லக்கூடிய நாணயத்தை ஈட்டுங்கள். அது சிந்தனை, சொல், செயலால் அச்சிடப்பட்டு, பக்தி, சிரத்தை, நேர்மை என்ற முத்திரை பொறிக்கப்பட்டதாக இருக்கும்.


# யாழ்ப்பாண வலயமட்ட துடுப்பாட்டம்

# வாதரவத்தை விக்கினேஸ்வர சம்பியன்

யாழ்ப்பாண வலய மட்ட கிரிக்கெட் போட்டியில் வாதரவத்தை விக்கினேஸ்வர பாடசாலை பெண்கள் அணி 2019 வலய மட்ட சம்பியன் பட்டத்தை வென்றது.

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா அணியை எதிர்கொண்ட வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 6 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். 77 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புத்தூர் சோமஸ்கந்தா அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்கள் மாத்திரம் பெற்றதனால் வாதரவத்தை விக்கினேஸ்வர அணி 16 ஓட்டங்களால் வெற்றி வாகை சூடியது. தொடர்ந்து 6 வருடங்களாக வாதரவத்தை விக்னேஸ்வர அணி வலய மட்டம் சம்பியன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







தேசியமட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா கடந்த 9,10,11, ஆம் திகதிகளில் கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்றது. இவ் விளையாட்டு விழாவில் அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலய தரம் 4 (2018), தரம் 5 (2018) அணிகள் வெண்கலப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். (க)

## வதிரி ஸ்ரீமுருகன் அணியை வீழ்த்தி சம்பியனானது கரணவாய் கிழக்கு இளைஞர்



கரவெட்டி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் கரணவாய் கிழக்கு இளைஞர் விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆனது. வதிரி ஸ்ரீமுருகன் அணியுடன் இறுதிப்போட்டியை விளையாடிய கரணவாய் கிழக்கு இளைஞர் அணி நாணயச் சுழற்சியில் வென்று களத் தடுப்பை தேர்வு செய்தது. இதற்கு அமைவாக 15 ஓவர் நிறைவில் வதிரி ஸ்ரீமுருகன் அணி 56 ஓட்டங்களைப் பெற்றது. வதிரி ஸ்ரீமுருகன் சார்பாக சசி-16, மலரவன்-9 ஓட்டங்களை பெற்றிருந்தனர். பந்து வீச்சில் வனிதன்-5, வினோஜன்-3, சஜீவன்-2 என இலக்குகளை கைப்பற்றினர்.

57 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரணவாய் கிழக்கு இளைஞர் அணி 14.2 பந்துப் பரிமாற்றத்தில் தமது வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் கரணவாய் கிழக்கு இளைஞர் அணி சார்பாக திருபரன்-16,டிலக்ஷன் 12 ஓட்டங்களை தம் அணிக்காகப் பெற்றனர். பந்து வீச்சில் வதிரி ஸ்ரீமுருகன் அணி சார்பில் மலரவன்-4, கிருசிகன்-2இலக்குகளை கைப்பற்றினர்.

இதன்மூலம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியில் கரணவாய் கிழக்கு இளைஞர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று கிண்ணம் சுவீகரித்தது. (க-60)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## யாழ்.மாவட்ட தாச்சி சங்க பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டு பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் வை. ஆனந்தஜெஸ்கரன் தலைமையில் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்திற்கு ஒரு களகத்தில் இருந்து 2 பிரதிநிதிகளை அனுப்பி கூட்டம் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அறியத் தருகின்றோம் என யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (க)

## உதயசூரியன் அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது சைனிங்



வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக 72 ஆவது வருட நிறைவை முன்னிட்டு மாபெரும் விளையாட்டு விழாவின் முதல் நிகழ்வான 19 வயதின் கீழ் 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது.

இதில் 06:00 என்ற கோல் கணக்கில் சைனிங்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

கோல் போட்ட வர்கள் போட்டியில் செந்தூரன் 3 கோல்களையும் அன்டன் பிரகாஸ் 2, தீபன் 1 கோல்களைப் போட்டனர். (க)

## முன்னாள் கட...

நேற்றைய தினம் 6 மணிநேர விசாரணையை முன்னெடுத்தனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பாகவே இவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை 8 மணி நேரம் விசாரணை செய்த சி.ஐ.டி. நேற்று மீளவும் அவரை ஆறு மணி நேரம் விசாரித்து வாக்கு மூலம் பெற்றதாக சி.ஐ.டி.யின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். அதன்படி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் குறித்த சம்பவம் தொடர்பில் 14 மணிநேர விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் மீள விசாரிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வசந்த கரன்னகொடவிடம் 11 பேர் உள்ளடங்கும் இந்த ஐவரையும் கடத்தியமை மற்றும் சட்ட விரோதமாக தடுத்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும் அதற்கு எதிராக செயற்படாமை தொடர்பில் விசேடமாக விசாரிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வசந்த கரன்னகொட பல கேள்விகளுக்கு நழுவல் போக்கான பதில்களை வழங்கியுள்ளதாக விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பாதாள உல...

டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றில் வைத்து அவரும் அவரது சகாக்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் சிறப்பு அதிரடிப் படையினர் முன்னெடுக்கும் தொடர் விசாரணைகளில் மாகந்துரே மதூஷின் குழுவைச் சேர்ந்த பலர் தென்னிலங்கையில் கைது செய்யப்படுகின்றனர். கடந்த திங்கட்கிழமையும் அவரது சகா ஒருவரின் வீட்டிலிருந்து சுமார் 180 கோடி ரூபாய் பெறுமதியான 171 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

மாகந்துரே மதூஷின் வடக்கு மாகாண முகவராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துஷ்யந்தன் என்பவர் செயற்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த நபர் பொலிஸ் உயர் மட்டத்தினருக்கும் நன்கு தெரிந்தவர் என்றும் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ் நகரில்...

கிழமை இரவு சந்தேகநபர் சுமார் 16 கிலோ கிராம் மாவா போதைப் பொருள் பொதிகளுடன் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தினேஸ் கருணாரட்னவின் கீழான சிறப்புப் பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபர் தனது உடமையில் மாவா போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன்கிழமை குற்றத்தை ஏற்றுக் கொண்டதால் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரது வீடு யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் சோதனையிடப்பட்டது. அதன் போது விற்பனைக்குத் தயாராகப் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 16 கிலோகிராம் மாவா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவர் இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3)

## ஜெனிவாவின் புதிய பிரேரணைக்கு...

னுகம வரைவார். அந்த உரை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஒப்புதல் பெறப்பட்டே சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க பாராளுமன்றில் நேற்று அறிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவின் தலைமையில் அரச தரப்புக் குழுவை ஜெனிவாவுக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளார்.

எனினும், தற்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள கலாநிதி சரத் அமுனுகமவும் அரசதரப்புக் குழுவில் இடம்பெறுவார். அவர் ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதியாக செல்கிறார். இந்தக் குழுவில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் இடம்பெற்றுள்ளார்.

அதிகாரபூர்வமான குழுவை ஜெனிவாவுக்கு அனுப்புவதில்லை என்றும், அங்குள்ள இலங்கைத் தூதரகமே அரசின் நிலைப்பாட்டை ஐ.நா மனித உரிமைகள் சபையில் வெளிப்படுத்தும் என்றும், முன்னதாக அரசு முடிவெடுத்திருந்த நிலையிலேயே, ஜனாதிபதி தமது தரப்பில் குழுவொன்றை அனுப்ப திட்டமிட்டிருந்தார்.

ஆரம்பத்தில் இந்தக் குழுவில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரே குழுவை அனுப்புவது முக்கியமானது என்று ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டி அந்தக் குழுவில் இருந்து நான் விலகிக் கொண்டேன்.

பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கும் அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இருக்காது.

மார்ச் 21ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் உரையாற்றுவார்.

அந்த உரையின் உள்ளடக்கங்களை ஜனாதிபதியின் பிரதிநிதியான சரத் அமுனுகம வரைந்து கொடுப்பார்.

வெளிவிவகார அமைச்சரின் உரை, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஒப்புதலுக்காக காண்பிக்கப்படும். ஜனாதிபதியை ஒதுக்கி வைத்து நீங்கள் அதனைச் செய்ய முடியாது என்றார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான 5 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று ஜெனிவாவுக்குப் பயணமாகவுள்ளது.

ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான இந்தக் குழுவில், வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, வெளிவிவகாரச் செயலர் ரவிநாத ஆரியசிங்க, பிரதி சொலிசிற்றர் ஜெனரல் நெரின் புள்ளே ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இந்தக் குழுவினர், ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி அசீஸ் மற்றும் பிரதி வதிவிடப் பிரதிநிதி சமந்த ஜெயசூரிய உள்ளிட்ட அதிகாரிகள் குழுவுடன் இணைந்து செயற்படவுள்ளனர். (ம-3)

## அரசியலமைப்பை ஜனா...

மன்றத்தில் நடைபெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜனாதிபதி தொடர்ந்தும் அரசியலமைப்பை மீறும் வகையில் செயற்பட்டு வருகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை எம்மால் வேடிக்கை பார்க்க முடியாது.

அரசியலமைப்பை மீறி ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தார்.

எனினும் அரசியலமைப்பை மீறி பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எதுஎவ்வாறு இருந்தாலும் ஜனாதிபதி இன்று அரசியலமைப்பினை கடலை சுற்றும் கடதாசியாக பயன்படுத்தி வருகின்றார். இதனை எம்மால் வேடிக்கை பார்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மைத்திரி...

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே பசில் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன கட்சி ஆகியவற்றுக்கிடையில் கடந்த சில வாரங்களாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த கலந்துரையாடல் நிறைவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக அறிவிக்கப்படும் என கூறினார். மேலும் மகிந்த ராஜபக்ஷவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும் என பொதுஜன பெரமுன கட்சியில் அனைவரது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எனினும் 19 ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக போட்டியிட முடியாது என்றும் அவர் கூறினார். (ம-3)

## சர்வதேச விசாரணையே...

ஐ.நா மனித உரிமைகள்பேரவையின் பிரதான அவையில்இடம் பெற்ற பொது விவாதத்தில் விடயம் 4-ல் கலந்துகொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரை இங்குவருமாறு,

மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் பாரியளவில் மீறப்பட்டமைக்கான, குற்றவியல் நீதிமற்றும் பொறுப்புக்கூறல் போன்றவையே, இந்தப் பேரவையில் நாடுகளைமையப்படுத்திய 2012-ல் ஆரம்பித்து 30/1 மற்றும் 34/1 வரையிலான, இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்படு வதற்கானமிகப் பிரதானமான நியாயப்படுத்தலாக விளங்கியது.

ஆயினும், 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து, அதற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்ட தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் குற்றவியல் நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிராகரித்து வருகிறார்கள். இன அழிப்பினால் பாதிக்கப்பட்டவர்களோ குற்ற வியல் நீதியையும் பொறுப்புக்கூறலையும் கோரிநிற்க, இந்தக் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குமத்தியில் வடக்கில் உரையாற்றிய பிரதம ரோமன்னிப்போம் மறப்போம் எனவெளிப்படையாக கூறியுள்ளார்.

நாடுகளைமையப்படுத்திய இலங்கை மீதான இந்ததீர்மானங்களை நியாயப்படுத்து வதற்கானமுக்கியகாரணிகளாக குற்றவியல் நீதியையும் பொறுப்புக் கூறலையும் தொடர்ச்சியாக இலங்கை அரசு நிராகரித்து வருகின்ற நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் பாதிப்படைந்த மிகப்பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு, குற்றவியல் நீதியைவழங்க முடியாது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

தீர்மானத்தில் கூறப்பட்ட ஏனைய விடயங்களில் பெயரளவுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்னேற்றங்களாக காண்பிப்பதும், தாம் வழங்கிய உறுதிப்பாட்டைநிறைவேற்றாமல் காலத்தை இழுத்தடிப்பதும் இலங்கை அரசின் நேர்மையற்றபண்பையும் கபடத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது.

அதனடிப்படையில்இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு பரிந்துரைத்தல் அல்லது சர்வதேச விசேட குற்றவியல் தீர்ப்பாயத்தை நிறுவுதலே பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரேயொரு வழிமுறையாகும் என்பதை நாம் மீளவும் வலியுறுத்திக் கூறுகின்றோம் என்றார். (ம-3)

## காணாமல் போனோரின் உற...

ஆளுநர் சுரேன் ராகவனையும் ஜனாதிபதி இணைத்துள்ளார்.

இந்நிலையில் தாம் ஜெனிவாவில் தமிழ் மக்கள் சார்பில் எதையாவது பேசவேண்டுமானால் அதனை தனக்கு நேரடியாகவோ, எழுத்துமூலமாகவோ சமர்ப்பிக்கும்படி ஆளுநர் பகிரங்கமான அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

இதற்கமைய ஆளுநரின் பொது மக்கள் தினமான நேற்றையதினம் கைதடியில் உள்ள வட மாகாண முதலமைச்சர் அமைச்சில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 8 பேர் உள்ளடங்கிய குழுவினர் வடமாகாண ஆளுநரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை கையளித்துள்ளதுடன், ஆளுநருக்கு நேரடியாகவும் தமது கருத்துக்களை கூறியிருக்கின்றார்கள். ஆளுநருக்கு கையளிக்கப்பட்ட மகஜரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலை வெளிப்படுத்தவேண்டும், தடுப்புமுகாம்கள், சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் விபரங்களை வெளிப்படுத்தவேண்டும்.

காணாமல் போனவர்கள் அலுவலகத்தை நிராகரிக்கிறோம் என்பன உள்ளடங்கலாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். (ம-3,9)

## அரச அலு...

வதற்கும் அரசு தடை விதிக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் அமைச்சரவையில் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கே அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

புற்று நோயாளர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன்காரணமாக, புற்றுநோயை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


கொவிசெத
திகதி 2019.03.13
சீட்டிழுப்பு இலக்கம் 2062
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 13 15 57
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13-03-2019
சீட்டிழுப்பு இலக்கம் 925
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 0 7 0 9 9 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-03-13
சீட்டிழுப்பு இலக்கம் 126
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 24 54 59 81
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/03/13
சீட்டிழுப்பு இலக்கம் 0356
வெற்றி எழுத்து P
சுப்பர் இலக்க 25
வெற்றி இலக்கங்கள் 39 42 70 77

## வணிகத்துறையில் வேலைவாய்ப்பு

வணிகத்துறையில் முன்னணியில் திகழும் எமது லங்கா நிறுவனமானது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் நிறுவவுள்ளது. கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

அலுவலக மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர், விற்பனையாளர்.

**தகைமை :** O/L, A/L மற்றும் மேற்தகைமை உடையோர் விண்ணப்பிக்கலாம் சர்வதேச ரீதியான இலவச பயிற்சியுடன் பயிற்சியின் போது 15,000 - 35,000 பயிற்சியின் பின் 40,000 - 60,000 வரை பெற்றுக் கொள்ள முடியும்.

**தொடர்பு : 076 676 7620**

(7735)






**வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்**

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623**

(7974)


## மைத்திரி...

கடிந்துகொரண்டார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் மூன்றாவது வாசிப்பின் மீதான குழுநிலை விவாதங்கள் பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் விவாதம் இடம்பெற்றது. எனினும்ஜனாதிபதிநேற்று பாராளுமன்றுக்குச் சமுகமளிக்காமல் கென்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் பங்கேற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க இருவரும் மைத்திரிபால சிறிசேனவை கடுமையாகச் சாடினர்.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகள் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ம-3)


## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் கடை வேலைக்கு 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர் தேவை.

**தொடர்பு : 077 500 7960**

(7975)



## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



(C-5736)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்புகளுக்கு : 077 432 2982**

(C-5773)



## SLAS/SLEAS (Ope/Ltd)

**கருத்தரங்கு தொடர் - ③**

பிரதி சனிக்கிழமைகளில் மட்டும்

**16.03.2019**

**P.கமல்தாசன் மற்றும் துறைசார் வளவாளர்கள்**

R.C.அமல்ராஜ் K.தெய்வேந்திரம்
A.சுபாகரன் AK.கீர்த்திராஜன்
K.குமணன்

**இவ் வளவாளர் சனிக்கிழமை மட்டுமே**

வரிமதிப்பீட்டாளர், புள்ளிவிபரவியலாளர் நீதிமன்ற பதிவாளர், எழுதுனர், தர்மாசிரியர், LLB போட்டிப்பரீட்சைகளுக்கான வகுப்புக்களும் தனித் தனியாக இடம்பெறும்.

## நாவலர்கல்வி நிறுவனம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7966)
077 111 6739
076 166 1986


# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பர்கள் இ.அகிலன், அ.அன்பரசி ஆகியோரின் அன்புத்தாயாரும் அ.அருள்செல்வனின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி இரத்தினசிங்கம் அன்னப்பிள்ளை**

(ஓய்வு பெற்ற பிரதம தாதிய உத்தியோகஸ்தர்)

அவர்கள் கடந்த 11.03.2019 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அவரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.03.2019வியாழக்கிழமைநடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு.

தகவல் - நண்பர்கள்

(C-5770)


## கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின்



வர்த்தக கையியக்க மெசின்



வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca

(7939)




## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532


# அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 : 11 : 1925



மறைவு 14 : 02 : 2019

## அமரர் பொன்னையா பாலசுப்பிரமணியம் (மணியம்)

**(முன்னாள் முகாமையாளர், ரட்ணா ஸ்ரோர்ஸ், கொழும்பு)**

கடந்த 14.02.2019 அன்ற இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் பொன்னையா பாலசுப்பிரமணியம் அவர்களது சிவபதப்பேறுகுறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்றைய தினம் 14.03.2019 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், சபீண்டீகரண நிகழ்வு 16.03.2019 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத் தருணத்தில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள் நாடுகளிலும் இருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர் வளையம், மலர் மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும், மற்றும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*குறிப்பு : தயவு கூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*


"வசந்த இல்லம்"
ஒடக்கரை. பருத்தித்துறை.

(C-5771)

தகவல் : குடும்பத்தினர்.

# 45ஆம் நினைவு நாள் அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 18 : 03 : 1954



விண்ணில் 29 : 01 : 2019

கடந்த 29.01.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் கந்தசாமி ஸ்ரீகாந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 14.03.2019 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், இணையத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் ஏனைய வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)

தகவல் : குடும்பத்தினர்
மானிப்பாய் வீதி, நாலுகால் மடம் (லட்சுமி வெதுப்பகம்)
**T.P : 077 218 9718**

(7951)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.